விலை ரூபா: 20.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 27 புதன்கிழமை (11.07.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 205

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## அரசியல் கைதிகளின் அவலம் குறித்து மனிதவுரிமை பேரவைக்கு அவசர கடிதம்

### உறவுகள் அனுப்பிவைக்க ஏற்பாடு

(கொழும்பு)

சிறைச்சாலைகளுக்குள் தங்களின் உறவுகள் எதிர்நோக்கும் அவலங்கள் குறித்து விளக்கியும் அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனக் கோரி தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கு கடிதமொன்றை அனுப்பி வைக்கவுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் சிபாரிசு செய்துள்ளபோதிலும் இந்த விடயம் குறித்து அரசு காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் முன்னெடுக்கவில்லை எனவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்படவுள்ளது.

அத்துடன் தமிழ் அரசியல் கைதிகள் அண்மைக் காலமாக தொடர்ச்சியாக தாக்கப்பட்டுவரும் சம்பவங்கள் தொடர்பில் ஆதாரபூர்வமான தகவல்களை இந்தக் கடிதத்தில் இணைக்கவுள்ள கைதிகளின் உறவுகள், தங்களின் உறவுகளின் விடுதலை விடயத்தில் சர்வதேசத்தினதும் (20ஆம் பக்கம் பார்க்க)

## சென்னையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிரான போக்கிற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும் என்று கூறி சென்னையில் சர்வமதத் தலைவர்கள் பங்கு பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்துக் கோவில்கள், 400க்கும் மேற்பட்ட கிறிஸ்தவ ஆலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் இடிக்கப்பட்டுள்ளதாகவும், கத்தோலிக்க பாதிரியார்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

# அதிகாரிகளின் உத்தரவுகளை மீறி குற்றச்செயல் இடம் பெற்றிருக்கும்?

### படையினர் மீது கோத்தபாய சந்தேகம்

(கொழும்பு)

குற்றச் செயல்களில் ஈடுபடும் படையினர் தண்டனைகளிலிருந்து தப்பிக்க முடியாது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் ஒரு சில படை வீரர்கள் அதிகாரிகளின் உத்தரவுகளை மீறி குற்றச் செயல்களில் ஈடுபட்டிருக்கக் கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)




கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டம்

## 2 கிலோ கஞ்சாவுடன் நபரொருவர் கைது

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலையின் பின்புறமாக மேசன் தொழில் செய்பவரிடமிருந்து 2 கிலோம் கிராம் எடையுடைய கஞ்சா செடிகள் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்தே குறித்த நபர் பயிரிட்ட கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டதுடன், சந்தேகநபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தென்பகுதியைச் சேர்ந்த இவர் சூட்சுமமான முறை (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். காணிகள் எதுவும் சுவீகரிக்கப்பட மாட்டாது

### யாழ்.தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையம், காங்கேசன் துறை முகம் அமைப்பதற்கு மட்டும் காணிகள் சுவீகரிக்கப்படுவதாகவும் யாழ்ப்பாணத்தில் காணிகள் சுவீகரிக்கப்படமாட்டாது என இராணுவம் அறிவித்துள்ளது.

முகாம்களை அமைப்பதற்காக யாழ்ப்பாணத்தில் காணிகள் சுவீகரிக்கப்படமாட்டாது என யாழ்.கட்டளைத்தளபதி மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

பலாலி விமான நிலையத்தை அமைப்பதற்கும் காங்கேசன் துறைமுகத்தை அமைப்பதற்கும் காணிகள் சுவீகரிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கினுடன் நடைபெற்ற சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## கோமா நிலையிலுள்ள கைதியின் கால்கள் சங்கிலியால் பிணைப்பு

### காப்பாற்றக் கோரி தாயார் கதறல்

(கொழும்பு)

வவுனியா சிறைச்சாலையில் தாக்கப்பட்டு மகர சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு தற்போது ராகம வைத்தியசாலையில் இரண்டு கால்களும் சங்கிலியால் பிணைக்கப்பட்டு கோமா நிலையிலுள்ள தமது மகனான முத்துராஜா டில்ருக்ஷனைக் காப்பாற்றுமாறு அவரது தாயார் உருக்கமான கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

தமதுமகன் ஐந்து வருடங்களுக்கு முன்னர் காணாமல் போனவர் எனவும் மன்னார் இலுப்பைக்கடவையைச் சேர்ந்த இந்தப் பெண் தெரிவித்தார்.

இவர் தன்னுடைய கணவர் அந்தோனி முத்துராசா மற்றும் பிள்ளைகள் உறவினர்கள் சகிதம் நேற்று முன்தினம் மன்னார் நகருக்கு வருகை தந்த மன்னார் மாவட்ட ஆயர் வண. இராயப்பு (20ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரம் இல்லாத பதவி!

## இராணுவத் தளபதி விசனம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சில் இராணுவத்தின் சேவா வனிதா பிரிவுக்கும், குடியியல் நிர்வாகப் பிரிவுக்கும் மட்டுமே உத்தரவுகளைப் பிறப்பிக்க முடிபதாகவும் மற்றவையெல்லாம் பாதுகாப்புச் செயலாளரின் கையிலேயே இருப்பதாகவும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய விசனம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் றொகான் தளுவத்த விடமே அவர் இவ்வாறு புலம்பியுள்ளதாக லங்கா நியூஸ்வெப் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஜெனரல் தளுவத்த தற்போது கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரியின் துணைவேந்தராக பணியாற்றுகிறார். இந்த பாதுகாப்புக் கல்லூரியின் நிர்வாக சபையில் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரியவும் ஒரு உறுப்பினராவார்.

இராணுவம் தொடர்பான விவகாரங்கள் குறித்து இவர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 2 வருடங்களுக்கு ஆசிரியர்கள் இடமாற்றம் கோரமுடியாது!

## புதிய ஆசிரியர்களுக்கு ஆளுநர் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பாடசாலைகளில் புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் இரண்டு வருடத்திற்கு முன்னர் இடமாற்றம் வழங்குமாறு கோரிக்கை விடக்கூடாது என வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண பாடசாலைகளில் புதிதாக நியமிக்கப்பட்ட தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள், தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில ஆசிரியர் வெற்றிடம் காணப்பட்ட பாடசாலைகளுக்கு நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்கள். குறிப்பாக வன்னி மாவட்டங்களுக்கும், யாழ்.மாவட்டத்தில் தீவகப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இந்த பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் காணப்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களை பூர்த்தி செய்யும் நோக்கில் வழங்கப்பட்ட இந் நியமனங்கள் அந்தப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வியறிவை மேம்படுத்த உங்களுக்கு கொடுக்கப்பட்ட சந்தர்ப்பமாகும்.

அதை சரிவர நீங்கள் பயன்படுத்த வேண்டும். மாணவர்களின் கல்வியறிவை உயர்த்த வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளிற்கு நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் 2 வருடம் சேவையை பூர்த்தி செய்யாமல் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க முடியாது.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது என்பதை உறுதிபடத் தெரிவித்து கொள்கின்றேன்.

வட மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகள் கடந்த 2009 ஆம் ஆண்டு பூச்சியத்திலேயே இருந்தது. தற்போது பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில்கல்விக்குபலமில்லியன்ரூபாய்பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முப்பது வருடங்களாக அழிவினை சந்தித்த பிரதேசங்களை மூன்று வருடத்திற்குள் முழுமையாக அபிவிருத்தி செய்துவிட முடியாது.

யுத்த அழிவுகளின் விளைவாக கல்வியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. கடந்த வருடம் க.பொ.த. சாதாரணப் பரீட்சை பெறுபேற்றில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

எனவே புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் கல்வி தரத்தை உயர்த்த பாடுபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)


## மக்கள் வங்கி
வவுனியா கிளை
## கேள்வி அறிவித்தல்

வடமாகாணம் யாழ். மாவட்டம் பருத்தித்துறை சந்தைக்கு அருகாமையில் பஸ் நிலையம் முன்பாக வர்த்தக வணிக வியாபார நிலையங்கள் அமைக்கக் கூடிய பெறுமதி மிக்க ஆதனம் (02 பரப்பு - 00.11குளி)

| கிளை | காணியின் விவரணம் | ஆதனத்திற்கு செல்லும் வழி | தொ.பே.இல. |
|---|---|---|---|
| வவுனியா கிளை | உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி.ர. தங்கமயில் அவர்களால் அளந்து வரையப்பட்ட 2005-11ம் இலக்க 02.02.2005ம் திகதிய வரை படத்தில் வடமாகாணம் யாழ். மாவட்டம் வடமராட்சி பிரதேச செயலாளர் பிரிவு பருத்தித்துறை நகர சபை பருத்தித்துறை இறை வென்றி பாகு தேவன் குறிச்சி, பருத்தித்துறை பால் அமைந்திருக்கும் "நறுவலியடி" என்றழைக்கப்படும் ஆதனம், இவ்வாதனத்தின் எல்லைகள் வடக்கு வீதி, கிழக்கு பருத்தித்துறை சந்தை மற்றும் வரதமகள் கடை மேற்கு வீரபத்திரர் கோவில், தெற்கு ஒழுங்கை விஸ்தீரணப் பரப்பு-02 குளி-00.11 | இவ்வாதனம் பருத்தித்துறை பட்டின சபை 3ம் வட்டாரம் பத்திரகாளி ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல. 41 இல் பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக சந்தைக்கு அருகில் உள்ளது. | 024-2222972<br>024-2225054 |

கேள்வி அறிவித்தல்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான முடிவுத் திகதி 2012ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17ஆந் திகதி பிற்பகல் 2.00 மணி.

நியதி நிபந்தனைகள்

1. கேள்விப் பத்திரங்களையும் கேள்விகளுக்கான நியதி நிபந்தனைகளையும் பெற விரும்பும் கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபாய் 1,000 இனை செலுத்தி 17.07.2012 பி.ப2.00 மணிக்கு முன்பதாக இல.149, குட்செட் வீதி, வவுனியாவில் அமைந்துள்ள மக்கள் வங்கி வன்னிப் பிராந்திய தலைமை அலுவலகத்தில் அல்லது இல.82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி யாழ்ப்பாண தலைமை அலுவலகத்தில் அல்லது வீரவாகு கட்டடம் பருத்தித்துறையில் அமைந்துள்ள மக்கள் வங்கி, பருத்தித்துறை கிளையில் பெற்றுக் கொள்ளலாம். இக் கேள்விப் பத்திரங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. ஒவ்வொரு கேள்விப் பத்திரமும் சமர்ப்பிக்கப்படும் போது மீளளிக்கப்படக் கூடிய வைப்பாக ரூபாய் 10,000 இனை மக்கள் வங்கி வவுனியாக் கிளையின் "Margin A\C"இல் செலுத்தி அதன் பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதி இணைக்கப்படல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படாத கேள்விதாரரின் வைப்புப் பணம் விற்பனையின் பின்னர் மீளளிக்கப்படும். ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விதாரர் கேள்வித் தொகையில் 10% இனை கேள்வி ஏற்கப்பட்டது தொடர்பான அறிவித்தல் கிடைக்கப் பெற்று 15 தினங்களுக்குள் செலுத்த வேண்டும். மிகுதியை 30 தினங்களுக்குள் செலுத்த வேண்டும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "பருத்தித்துறையில் அமைந்துள்ள ஆதனம்" என எழுதப் பட்டு பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 17.07.2012 பி.ப 2.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது கேள்விப் பத்திரங்கள் நேரடியாக இல. 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கி யாழ்ப்பாண பிராந்திய தலைமை அலுவலகத்தில் கையளிக்கப்பட வேண்டும்.
4. மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய பூர்த்தி செய்யப்படாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
5. கேள்விப் பத்திரங்கள் 17.07.2012 பி.ப 3.15 மணிக்கு மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகத்தில் விதந்துரைக்கப்பட்ட தெரிவுக்குழுவொன்றின் முன்னிலையில் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்வி தாரர்கள் அல்லது கேள்விதாரரால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் மாத்திரம் சமுகமளிக்கலாம்.
6. எந்தவொரு கேள்விப் பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப் பத்திரங்களையுமோ ஏற்றுக் கொள்ளவோ நிராகரிக்கவோ தெரிவுக் குழுவுக்கு உரிமை உண்டு.
7. ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விதாரர் முழுப்பணத்தையும் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்தத் தவறின் வைப்புத் தொகையான ரூபாய் 10,000 உட்பட்ட ஏனைய வைப்புக்களையும் இழக்க நேரிடும்.
8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் குறித்த ஆதனத்தின் நிலைப்பாடு பற்றி திருப்தியடைந்தவராக இருக்க வேண்டும் என்பதுடன் மதிப்பீட்டு வரிகள் மற்றும் ஏனைய வரிக் கொடுப்பனவுகள் நிலுவையாக இருக்கும் பட்சத்தில் அவற்றை செலுத்துவதற்கு சம்மதிக்க வேண்டும்.
9. உரித்து உறுதிகளையும் வேறு ஆவணங்களையும் மக்கள் வங்கியின் வன்னிப் பிராந்திய தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம். விண்ணப்பிக்க முன் கேள்விதாரர்கள் ஆதனத்தின் உரித்துடைமையில் பூரண திருப்தியடைந்தவராக இருக்க வேண்டும்.

பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமை அலுவலகம் (வன்னி),
இல: 149, குட்செட் வீதி,
வவுனியா. (தொ.பே. இல: 024-2222972)

(C-505)


## 82 பேர் திருமலையில் கைது

அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாக 2 படகுகளில் செல்ல முயன்ற 82 பேர் நேற்றுக் காலை திருகோணமலை பகுதியில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை கிழக்கு கடல் வழியாக வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முற்பட்டவர்களில் 82 இலங்கையர்கள் இருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ-11)

## உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்வி கற்று பட்டம் பெற்ற மற்றும் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்ற சகல மாணவர்களையும் நாளை காலை 8 மணிக்கு நிறுவன முன்றலில் ஒன்றுகூடுமாறு உயர் தேசிய கணக்கியல் வர்த்தக மற்றும் முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கம் கோரியுள்ளது.

உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்புக்கு உட்படுத்தப்படாத நிலையில் அது தொடர்பாக கலந்தாலோசிப்பதற்காக அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## கல்வியியற் கல்லூரியில் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விசேட கல்வி நூற்றாண்டை முன்னிட்டு விசேட கல்வி மன்றத்தால் நடத்தப்படுகின்ற நினைவுப் பேருரை பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நாளை பிற்பகல் 3.00 மணிக்கு கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

மூதறிஞரும் வித்துவானுமாகிய கலாநிதி க.சொக்கலிங்கம் ஐயா நினைவு பேருரையினை வைத்திய கலாநிதி சி.எஸ்.யமுனானந்தா "நில்லாத காலத்தில் 'கல்லான கல்வியும் கல்லாத கல்வியும்'' என்ற கருப்பொருளில் நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பீடாதிபதி அறிவித்துள்ளார். (எ)

# யாழின் அபிவிருத்திக்கு தடையாகவுள்ள மின்சாரம்!

## உயர் அதிகாரிகள் விசனம்

சீரற்ற மின்சார விநியோகம் காரணமாக குடாநாட்டில் முதலீடுகளைச் செய்ய முதலீட்டாளர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர் என அரச உயரதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த வருட இறுதிக்குள் மின்சார விநியோகம் பூரணப்படுத்தப்பட்டுவிடும் என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க பழைய பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் இலங்கை மின்சார சபையின் வட பிராந்திய பொது முகாமையாளர் அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது தெரிவித்திருந்தார்.

இருப்பினும் கடந்த 2 வருடங்களுக்கு மேலாக மின்சார விநியோகம் என்பது அனைவராலும் விமர்சிக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது.

இதனால் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் வாக்குறுதி நிறைவேற்றப்படுமா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

இந்நிலையில் சீரற்ற மின்சார விநியோம் காரணமாக யாழ்.குடாநாட்டில் முதலீடுகளைச் செய்ய முதலீட்டாளர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர் என்ற தகவலும் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

சிறிய, நடுத்தர கைத்தொழில் மையங்களைக் கூட ஆரம்பிப்பதற்கு மின்சார விநியோகம் தடையாக உள்ளது.

இதனால் வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகள் குறைந்து செல்கின்றன எனவும் அரச அதிகாரிகள் தரப்பில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

மேலும் அரச அலுவலகங்களில் உள்ள பல இலட்சம் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் சாதனங்கள் இந்த மின்சாரம் காரணமாக பழுதடைந்து வருவதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

முன்னறிவித்தல் இன்றி அடிக்கடி தடைப்படும் மின்சாரத்தினால் ஏற்படும் இவ்வாறான பாதிப்புகள் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டது.

யாழ்.குடாநாட்டில் தற்போது வீதி அபிவிருத்திப் பணிகள் காரணமாக மின்சாரம் பகல் வேளைகளில் தடைப்படுவது உண்டு.

இதற்கான அறிவித்தல்களை மின்சார சபை பத்திரிகை வாயிலாக விடுப்பதுண்டு.

ஆனால் இரவு வேளைகளில் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி மின்சாரம் தடைப்படுவதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் முதற்கொண்டு பல தொழிற் துறைகளிலும் பாதிப்பு ஏற்படுகின்றது.

மேலும் குடாநாட்டின் உற்பத்திகளை அதிகரிக்கவும், முதலீட்டாளர்கள் தொழிற் துறைகளை ஆரம்பிக்கவும் மின்சாரம் பாரிய தடையாகவுள்ளதாக அரச உயர் அதிகாரிகள் பலரும் குற்றம் சாட்டியுள்ளனர். (எ-6)


### இரசாயனவியல் பிரத்தியேக வகுப்புகள்

தற்போது பரீட்சைக்குத் தயாராகும் (A/L) மாணவர்களுக்கு துரித மீட்டல், கடந்த கால பரீட்சை வினாக்களினூடான பயிற்சியும் மற்றும் ஏனைய மாணவர்களுக்கான விசேட இரசாயனவியல் வகுப்புகளும் நடைபெறுகின்றன.

தொடர்பு: 0758350853

(8793)



### SPOKEN ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம்
14.07.2012 சனி 10மணி

E- CITY

குருகுலம், ஆனைப்பந்தி சந்தி,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

பிரதான வீதி, சங்கானை.

(8798)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கடவுள் பயம்

"தெய்வத்திற்கு பயந்து நடந்து கொள்" என்று சொல்கிறார்களே... அந்தத் தெய்வ பயம் தேவைதானா?'' என்று ஒரு பெரியவரைப் பார்த்து கேட்டார் ஒருவர்.

"கடவுளை பயத்தின் மூலமாக அடையவே முடியாது" என்று பதில் சொன்னார் அந்தப் பெரியவர். அதற்கு உதாரணமாக ஒரு கதையையும் கூறினார்.

ஒரு பிச்சைக்காரன் ஒரு அநாதைச் சிறுவனை வளர்த்து வந்தான். அவர்கள் இருந்த குடிசைக்கருகில் ஒரு சுடுகாடு இருந்தது. இந்த சிறியவன் இரவு வேளையிலே அந்தச் சுடுகாடு பக்கம் போகாமல் இருக்க ஏதாவது வழி செய்ய வேண்டுமென்று நினைத்தான் பிச்சைக்காரன்.

அதற்காக சிறியவனிடம் சொன்னான்... "இதோ பார்... இரவு வேளையிலே அந்தச் சுடுகாட்டுப் பக்கம் போனால்... அங்கே இருக்கும் பேய்கள் உன்னைப்பிடித்து தின்று விடும்" என்று கூறி பயமுறுத்தி வைத்தான்.

நாட்கள் செல்லச் செல்ல சிறியவன் படிப்பில் முன்னேறி வாலிப பருவத்தை அடைந்தான். இருந்தாலும் அவனுக்கு பேய் பற்றிய பயம் ஓயவில்லை!

ஒருநாள் பிச்சைக்காரன் அந்தப் பையனை ஒரு வேலை காரணமாக வெளியூருக்கு அனுப்ப வேண்டியிருந்தது... அவன் அந்தச் சுடுகாட்டைத் தாண்டிப் போக வேண்டும். அதுவும் இரவு நேரம். இவன் பயந்து நடுங்க ஆரம்பித்து விட்டான். இப்போது அவன் செய்வது அறியாது துடித்தான்.

இப்போது என்ன செய்வது என்று யோசித்தான் அந்தப் பிச்சைக்காரன். ஒரு தாயத்தையெடுத்து அந்தப் பையனின் கையிலே அதைக் கட்டினான். கட்டிவிட்டு சொன்னான்... "இனிமேல் அந்தப் பேய்கள் உன்னை ஒன்றுமே செய்ய முடியாது. கடவுள் அந்தப் பேய்களிடமிருந்து உன்னைக் காப்பாற்றுவார்" என்றான்.

இப்போது அவனுக்குத் தைரியம் ஏற்பட்டு விட்டது. துணிச்சலாக கிளம்பினான். பயணத்தை ஆரம்பித்தான். அப்படிப் போகும்போது யோசித்தான்.

"இப்போது... நாங்கள்... பேய்களைப் பார்த்து பயப்படுகிறோம்... இந்தப் பேய்களே கடவுளைப் பார்த்து பயப்பிடும் என்றால், அந்தக் கடவுள் எவ்வளவு பெரிய பேயாக இருக்க வேண்டும்..." இப்படி நினைக்க ஆரம்பித்தான். உடனே பேய் பயத்தை விட கடவுள் பயம் அதிகமாகப் போய்விட்டது. பாவம் அந்தச் சிறியவன். இரவிலே பேய்க்காகப் பயந்தான். பகலிலே மகா பேயான கடவுளுக்காக பயந்தான். போலிச் சாமியார்களைப் பார்த்தும் பயப்பட ஆரம்பித்து விட்டான்.

இப்போதுதான் அந்தப் பிச்சைக்காரன் விபரீதத்தை உணர்ந்தான்.

அந்தச் சிறியவன் கையிலே கட்டிய தாயத்தை கழற்றி அவன் முன்னாலேயே அடுப்பிலே வீசினான். அன்றிரவே சிறியவனை அழைத்துக் கொண்டு அந்தச் சுடுகாட்டுக்குப் போனான்.

அங்கே பேய், பிசாசு ஏதுவுமே இல்லையென்பதை சுட்டிக் காட்டினான். எதற்காக பேயைப் பற்றி முன்பு கூறினேன். ஏன் தாயத்தை கட்டி விட்டேன்- என்ற உண்மையை விபரமாக எடுத்துரைத்தான். இப்போது சிறியவனுக்கு மனதிலே ஒரு தெளிவு ஏற்பட்டது.

அவன் மனதினுள்ளே இருந்த பேய்- பிசாசு எல்லாம் ஓடிப் போய் விட்டது. பயத்தினால் உருவான போலிக் கடவுளும் "குட்பாய்" என்று சொல்லி விட்டு பறந்தார்.

மனிதனுக்கு "தான்" என்ற எண்ணத்தினால் உருவாகிய துன்பங்கள்... கவலைகள்... பாதுகாப்பற்ற நிலை... மரண பயம்... ஆகியவற்றில் இருந்து தப்பித்துக்கொள்ள கடவுளே கதி என்ற சரணாகதி நிலையை அவன் உருவாக்கிக் கொள்கிறான் என்று அந்தப் பெரியவர் கூறினார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# யாழ்.மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டும்

## பிரிட்டிஷ் தூதரிடம் கூறினார் அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது என யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பிரிட்டிஷ் நாட்டின் உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கின் நேற்று முன்தினம் அரச அதிபரை மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். இதன் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக அரச அதிபர் கூறும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கும் பணி இன்னும் பூரணப்படுத்தப்படவில்லை.

அந்த மக்களுக்கான வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது. இந்தியா மற்றும் ஏனைய பல அரச சார்பற்ற நிறுவனங்கள் வீடுகள் அமைத்து கொடுக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றன. இருப்பினும் பல குடும்பங்களுக்கு இன்னும் வீடுகள் தேவைப்படுகின்றன.

அத்தோடு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் இருதய சத்திர சிகிச்சைக்கூடம், கண் சத்திர சிகிச்சைக்கூடம் என்பன அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது என பல கோரிக்கைகளை தான் முன்வைத்ததாகவும் அரச அதிபர் கூறினார். (அ-6)

# கரைதுறைப்பற்று பி.செ.பிரிவில் நாளை மீள்குடியமர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்யவுள்ளதாக முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கருநாட்டுக்கேணி, கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத் தொடுவாய் தெற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைத் தவிர்ந்த ஏனைய கிராம சேவையாளர் பிரிவுகளை சேர்ந்த மக்களே மீள்குடியேற்றப் படவுள்ளனர்.

மீள்குடியேற்றத்திற்காக சொந்த இடத்திற்கு செல்ல விரும்பும் நண்பர்கள், உறவினர்களுடன் தங்கியுள்ள குடும்பங்கள் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மு/வித்தியானந்தா கல்லூரிக்கு மீள்குடியேறக்கூடிய ஆயத்தங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்வதுடன் தாங்கள் இதுவரை காலமும் தங்கியிருந்த கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு அப்பகுதி உதவி அரசாங்க அதிபரினால் மேல் ஒப்பமிடப்பட்ட விடுவிப்பு கடிதம் சமர்ப்பித்து தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.(அ-9-267)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40-50 | 70 | 70 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80-100 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100-120 | 90 | 120 | 80 |
| தக்காளி | 150 | 140 | -- | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 70 | 80 | -- | 80 |
| கரட் | 100 | 120 | 120 | 150 |
| பூசணி | 60 | 70 | 50 | 60 |
| புடோல் | 50 | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 50-60 | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100-120 | 60-80 | 90 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 80-100 | 120 | 110 | 60 |
| வெண்டிக்காய் | 50-60 | 60 | 70 | 90 |
| கருணைக் கிழங்கு | -- | 120 | 100 | -- |
| பயற்றங்காய் | 60 | 40 | 85 | 40 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 140 |
| பீற்றூட் | 80 | 70 | -- | 90 |
| கறிமிளகாய் | 140 | 100 | 90 | 160 |
| முருங்கைக்காய் | 30-50 | 60 | 100 | 80 |
| போஞ்சி | -- | 100 | -- | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 50 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 8-10 | 15 | 20 | 15 |
| தேசிக்காய் | 90 | 90 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 30 | 30 | 18-20 |

# இராசி பலன்

11.07.2012
(ஆனி 27, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
அட்டமி முன்னிரவு 11.21 மணிவரை
ரேவதி முன்னிரவு 8.24 மணிவரை
இராகுகாலம் 11.59-1.29 மணிவரை
சுபநேரம் 4.29-5.59 மணிவரை

**மேடம்** நல்லவர்கள் சந்திப்பால் நலம் காணும் நாள், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** பிரியமான சிலருக்காக செலவுகள் செய்யும் சூழ்நிலை அமையலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம்.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பண வரவுகள் எதிர்பார்த்தபடியே கிடைக்கும், பயணங்கள் கைகூடும்.

**கடகம்** கண்ணியமிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் தானே தேடி வரும், பயணங்களால் நன்மையுண்டு, நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கிடைக்கும்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புகள் சேரும் நாள், போட்டிகள் குறைந்து வியாபார விருத்தி ஏற்படும், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** கவலைகள் தீர குருவை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், அலைச்சல்கள் அதிகரிக்கும், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம்.

**துலாம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்** உடன் பிறப்புக்கள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வர், நேற்று குறையில் இருந்த பணிகளை இன்று மீதியும் தொடர்வீர்கள், மனதில் உற்சாகம் பிறக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், புத்திசாதுரியமாக நடந்து பொருள் வரவைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், மைத்துனர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** பொன்னான நாள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், எதற்காகவும் வீண் பிடிவாதம் பிடிப்பதை தவிர்ப்பது நல்லது, பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**மீனம்** விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சேமிப்பு பழக்கம் அதிகரிக்கும், பாராட்டும் புகழும் கூடும், பொதுநல ஈடுபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனிப்பாரற்றுக் கிடக்கும் மிருசுவில் வடக்கு பொதுக்கிணறு

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(மிருசுவில்)

மிருசுவில் வடக்கு பிரதேச வீதியோரங்களில் காணப்படும் பொதுக் கிணறுகள் பல வருடங்களாக புனரமைக்கப்படாமையால் மக்களும் பாடசாலை மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். மேற்குறித்த பகுதியில் உள்ள பொதுக்கிணறுகள் பல வருடங்களாக புனரமைக்கப்படாமலும் சுத்திகரிக்கப்படாமலும் காணப்படுவதால் அப்பகுதியால் செல்லும் மக்கள் மற்றும் மாணவர்களும் நீரை பெற்றுக் கொள்கின்றனர்.

இக்கிணறுகள் இடிந்து விழும் அபாய நிலையில் உள்ளது. அண்மையில் ஜெனிஸ் றொபின்சன் என்ற தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவன் இக்கிணற்றில் தண்ணீர் குடிக்கச் சென்றவேளை கிணற்றுக் கட்டடம் இடிந்து விழுந்து காயமடைந்துள்ளான்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இக்கிணறுகளை புனரமைத்தும் சுத்திகரித்தும் உதவ வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-85)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சரசாலை மத்தியில் இருந்து மட்டுவிலுக்கு செல்லும் வீதி புனரமைக்கப்படாமையால் போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வீதியானது கற்கள் நிறைந்த பள்ளம் மேடான வீதியாக இருப்பதனால் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வீதியால் தினமும் பல நூற்றுக் கணக்கான பயணிகளும் வாகனங்களும் பயணம் செய்வதை அவதானிக்க முடிகின்றது.

எனவே உரிய தரப்பினர் இவ்வீதியை புனரமைப்பதன் ஊடாக போக்குவரத்தை சீராக்க முடியுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

# ஆவணங்களை கோருகிறது ஓய்வூதியக் கிளை

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலக ஓய்வூதிய கிளையில் பராமரிக்கப்பட்டு வரும் கோவைகளின் ஓய்வூதியர் சிலரது சில ஆவணங்கள் இல்லாதிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அத்தகைய ஓய்வூதியர்களிடம் இருந்து குறித்த ஆவணத்தைப் பெற்று கோவையில் இணைப்பதற்கான ஏற்பாடுகளை ஓய்வூதியக் கிளையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

ஓய்வூதியக் கிளையால் குறித்த ஓய்வூதியர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டு வருவதாகவும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தென்மராட்சி பிரதேச செயல்க ஓய்வூதியக் கிளையில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியரின் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, ஓய்வூதிய இலக்கம், விதவை, அநாதை ஓய்வூதிய இலக்கம், ஓய்வு பெற்ற திகதி போன்ற விபரங்களை சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# முன்னாள் போராளிகளுக்கு 11 ஆம் திகதி நேர்முகத்தேர்வு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் புனர்வாழ்வுபெற்று தங்கியுள்ள முன்னாள் போராளிகளுக்கு சுயதொழில் கடன் வழங்குவதற்கான நேர்முகத்தேர்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கச்சேரி பகுதியில் உள்ள வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புனர்வாழ்வு அதிகாரசபையினால் நடத்தப்படும் இந்நேர்முகத்தேர்வுக்கு உரியவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.த. ஜெயசீலன் அறிவித்துள்ளார். (அ-3-10)




# வீட்டின் முன் வைக்கப்பட்ட குப்பைகளை அகற்றுங்கள்

## மக்கள் கோரிக்கை

(மிருசுவில்)

வடக்கு மிருசுவில் பகுதியில் உள்ள வீடுகளுக்கு முன்னால் பைகளில் இட்டு வைக்கப்பட்ட குப்பைகள் இன்னும் அகற்றப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் கார்த்திகை மாதம் சாவகச்சேரி பிரதேச சபையினரும் டெங்கு ஒழிப்பு குழுவினரும் இணைந்து நடத்திய டெங்கு ஒழிப்பு பிரசாரத்தின் போது வீடு வீடாகச் சென்று வீட்டில் உள்ள குப்பைகளை வீட்டிற்கு முன்னால் வைக்குமாறு கூறினார்க்ள். அக் குப்பைகளை தாம் உரியவர்களை வண்டிகளில் அனுப்பி எடுப்பதாக கூறினர்.

ஆனால் இன்றுவரை அக்குப்பைகள் எடுக்கப்படாது அப்படியே உள்ளது.

இவ்வாறு வைக்கப்பட்ட பொருட்கள் அகற்றப்படாதுள்ளமையால் டெங்கு பரவக் கூடிய நிலை உள்ளதாக மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இச் செயற்பாட்டை கருத்திற்கொண்டு இக்குப்பைகளை அகற்ற முன் வர வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-85)

# மகோற்சவம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் காளியம்பாள் திருக்கோவில் வருடாந்த மஹோற்சவ விழா எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 9 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவடையவுள்ளது. (அ-3-29)

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பணிப்புலம் ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை இரவு சப்பறத்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

23 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

# மின்சார வயர்கள் விசமிகளால் அறுப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஐயனார் கோவில் மின்சார வயர்களை சில விஷமிகள் அறுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரங்களில் இனம் தெரியாத சிலரின் நடமாட்டங்கள் கொழும்புத்துறைப் பகுதியில் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு காணப்படும் விசமிகளின் செயற்பாட்டால் அப்பகுதியில் சட்ட விரோதமான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.


எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-51)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழமுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய பகுதிகளிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)



இலங்கைவங்கியின் விரிவாக்கல் கிளை கடந்த 4 ஆம் திகதி புன்னாலைக்கட்டுவனில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் இலங்கை வங்கித் தலைவர் காமினி விக்கிரமசிங்க, வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி.சுமணசிறி ஆகியோர் இணைந்து கட்டடத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் சிறுவர் சேமிப்பு கணக்கினை பேணும் ஒருவருக்கு பிறந்தநாள் பரிசு வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்புடன் மு.காங்கிரஸ் இணைந்து போட்டியிடக்கூடாது

## அ.இ.மு.கா.செயலாளர் வலியுறுத்து

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் முஸ்லிம் கட்சிகள் இணைந்து போட்டியிடக் கூடாது என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் வை.எஸ்.எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எந்தவொரு முஸ்லிம் அரசியல் கட்சியும் இணைந்து போட்டியிடக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபகத் தலைவர் எம்.எல்.ஏ.எம்.அஷ்ரப் ஒரு போதும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடமாட்டார் எனவும் முஸ்லிம் விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே, முஸ்லிம் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டணி சேரும் கட்சிக்கு ஆதரவளிக்க மாட்டார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் ஏதேனும் இரகசிய இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவ்வாறு இரகசிய இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தால் அது முஸ்லிம் மக்களின் நன்மைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்காது. அது வெறும் அரசியல்வாதிகளுக்கு நன்மை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கும் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீராவியடி கடையிற் சுவாமிகள் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தியநாத பெருமான் ஆலய அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை தொடக்கம் பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ்வலங்கார உற்சவம் நிறைவடைந்த மறுநாளாகிய எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை 108 சங்காபிஷேகம் நடைபெறுமென ஆலய உபயகாரர்கள் அறிவித்துள்ளனர். (அ-9)

# த.தொ. கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் Sri Lanka Computer Driving License (SLCDL)உடன் தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கான சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் பயிற்சி நிலையங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக மாவட்ட முகாமையாளர் கி. கிருஸ்ண பாலன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயதிற்கும் 25 வயதிற்கும் உட்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமைச்சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியும், க.பொ.த (உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை முகாமையாளர், NAITA, இல.7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார்.

அத்துடன் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கை நெறி (ICT) க்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிட வேண்டும். (அ-9)

# கைவிடப்பட்ட வாகனங்களை 31 ஆம் திகதிக்குள் பெற்றுக்கொள்க!

## அல்லது ஏலத்தில் என்கிறது கிளி.மாவட்ட செயலகம்

(கிளிநொச்சி)

கடந்த கால யுத்தத்தின் போது கைவிடப்பட்ட வாகனங்களை மீளப் பெற்றுக் கொள்ளுமாறு கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

வடமாகாண கௌரவ ஆளுநரின் நெறிப்படுத்தலின் கீழ் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பராமரித்து வரப்படுகின்ற போரின் போது கைவிடப்பட்டு எடுத்து வரப்பட்ட ஒரு தொகுதி வாகனங்கள் கிளி.நகரத்தின் திருநகர் பகுதியில் அமைந்துள்ள வாகனப் பேணலகத்தில் தொடர்ந்தும் உரிமை கோரப்படாது இருந்து வருகின்றது.

இந்நிலையில் இப் பேணலகத்தினை தொடர்ந்தும் பராமரிப்பதில் பல்வேறு இடர்பாடுகளையும் டெங்குநோய் அபாயத்தினையும் எதிர்கொள்வதினால் இறுதிச் சந்தர்ப்பமாக எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பதாக உரித்துடையவர்கள் அவற்றினைப் பார்வையிட்டு பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் உரிமை கோரப்படாத அனைத்து வாகனங்களையும் உரிய சட்ட விதிகளின் கீழ் அரசாங்க நடைமுறைக்கமைவாக ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறிவித்துள்ளார். (அ-9)

# அவுஸ்.க்கு தப்பிச்செல்ல முற்பட்ட இருவர் கைது

திருகோணமலை உப்புவெளி- சாமபல்நிதி மயானத்திற்கு அருகில் உள்ள கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட இருவரும் அவர்களுக்கு துணைபுரிந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் இரவு 8.45 மணி அளவில் உப்புவெளி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் திருகோணமலை, உப்புவெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் உப்புவெளி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ-2)


## மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

பிறப்பு:- 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-ரோகிணி 1
உயரம்: 5'8"
கி.பா:-15.5, 10 இல் செவ்,
தொழில்:-B.sc Quantity Surreying Moratuwa(Dubai)
B/085

பிறப்பு:- 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-சதயம் 2
உயரம்: 6'
கி.பா:-49, 2 இல் செவ்
தொழில்:-சைகோலஜி அபடீன் யூனிவேசிற்றி U.K_ (P.R)
B/072

பிறப்பு:- 1984 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-சித்திரை 2
உயரம்: 5'1"
கி.பா:-8.75, 6 இல் செவ்
தொழில்: பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்
G/087

பிறப்பு:- 1960 இந்து விஸ்வகுலம்.
நட்சத்திரம்:-சித்திரை 1
உயரம்: 5'6"
தொழில்:- சைவபோசனம்
எதிர்பார்ப்பு:- சாதகம் பார்க்காமலும் விவாகரத்தானவர்களும் ஏற்கப்படும்.
G/084

பிறப்பு:- 1984 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-அனுஷம் 2
உயரம்: 5'6"
கி.பா:-78, 12 இல் செவ்
தொழில்:- Bsc,I.T Engineer அவுஸ்ரேலியா (P.R)
B/078

பிறப்பு:- 1977 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-மிருகசீரிடம் 4
உயரம்: 5'11"
கி.பா:-39, 2 இல் செவ்
தொழில்:A/L அமெரிக்க (P.R)
B/081

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

பிறப்பு:- 1978 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-சதயம் 1
உயரம்: 5'
கி.பா:-27 , 4 இல் செவ்
தொழில்:- A/L,
G/086

பிறப்பு:- 1974 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-விசாகம் 4
உயரம்: 5'2"
கி.பா:-13.75 , 2 இல் செவ்
தொழில்:-(B.L.E) முகாமைத்துவ உதவியாளர்
G/079

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் ஊக்கமான உழைப்பால் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும்

## வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வியின் ஊடாகவே எமது சமூகத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்ல முடியும். அதற்காக ஆசிரியர்கள் பாடுபட வேண்டும் என வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

வட மாகாண பாடசாலைகளில் புதிதாக நியமிக்கப்பட்ட தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள், தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர் தொழிலானது புனிதமான, உன்னதமான, மேன்மையான தொழில். இறைவனால் வழங்கப்பட்ட சந்தர்ப்பமாக கருதி சேவை மனப்பாங்குடன் செய்ய வேண்டிய தொழில். பல உயர் அரச அதிகாரிகள் தமது சேவையின்னை ஆசிரியர் சேவையூடாகவே ஆரம்பித்துள்ளனர்.

மாணவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும். இதய சுத்தியோடு அர்ப்பணிப்புடன், சேவை மனப்பாங்குடன் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர் ஈடுபட வேண்டும்.

மாணவர்களுடன் நல்ல உறவினைப் பேணி சிறந்த வழிகாட்டியாக ஆசிரியர்கள் திகழ வேண்டும். எமது சமுதாயத்தை கல்வியினால் உயர்த்த வேண்டும். கல்வியினால் உயர்வடையும் சமுதாயத்தை உலகம் போற்றும்.

வடமாகாணத்தில் நீண்டகாலமாக இடம்பெற்ற யுத்த அழிவுகளினால் பல பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கல்வித்துறையிலும் பல பாதிப்புக்கள் உள்ளன. அவற்றை முன்னேற்ற ஆளுநர் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

ஆசிரியர்கள் சமூகத்தவர்களினால் மதிக்கக்கூடியவர்களாக, சமூக விரும்பிகளாக வாழ வேண்டும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வியறிவை வளர்த்தெடுக்கும் வகையில் உங்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பல மில்லியன் ரூபா செலவில் பாடசாலைகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு பல்வேறு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கஷ்டப் பிரதேசங்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளபோதும் போக்குவரத்து, தங்குமிடவசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, எமது சமுதாயத்தை கல்வியால் உயர்த்த அனைத்து ஆசிரியர்களும் பாடுபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் உதயகுமார், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ராதாகிருஷ்ணன் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

## நிவாரண விநியோகம்

(சாவகச்சேரி)

பளைப் பிரதேசத்தில் இத்தாவில் மற்றும் வேம்பொடுகேணிப் பிரிவுகளில் அண்மையில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான உலர் உணவு பொருள் நிவாரண விநியோகம் இன்று புதன்கிழமை இத்தாவில் சந்தியில் வைத்து விநியோகிக்கப்படுமென பச்சிலைப் பள்ளி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தலைவர் செ.மார்கண்டு அறிவித்துள்ளார்.

(அ-3-29)

# வடக்குக்கிழக்கு மீள் இணைப்பு விடயத்தை தனி ஈழக்கோரிக்கையாக கருத முடியாது

## சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மீள இணைக்கப்படுவதன் மூலம் ஈழ இராச்சியத்தை உருவாக்க முயற்சிப்பதாக எவரேனும் குற்றம் சுமத்தினால் அது நாட்டையும் மக்களையும் பிழையாக வழி நடத்தும் நடவடிக்கையாக கருதப்பட வேண்டுமென த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் அமைப்பின் அடிப்படையில் நாட்டின் எந்த மாகாணங்களையும் ஒன்றிணைக்க முடியும். இதன்படி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள இணைக்கப்பட வேண்டும்.

ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து இன மக்களினாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

வடக்கு பிரச்சினைக்கு ஈழ இராச்சிய தீர்வுத் திட்டம் பொருந்தாது என்பது கட்சியின் நிலைப்பாடாகும். ஈழ இராச்சியத்திற்கோ அல்லது தனி நாட்டுக் கோரிக்கைக்கோ கூட்டமைப்பு குரல் கொடுக்காது.

(அ-2)

# 717 வன்னி பட்டதாரி பயிலுநர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன

(பூந்தோட்டம்)

வன்னிப்பிரதேசமான வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை சேர்ந்த 717 பட்டதாரி பயிலுநர்களுக்கு நேற்று முன்தினம் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் பட்டதாரி பயிலுநர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாட் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் வவுனியாவை சேர்ந்த 326 பட்டதாரிகளுக்கும் முல்லைத்தீவைச் சேர்ந்த 137 பட்டதாரிகளுக்கும் மன்னாரை சேர்ந்த 254 பட்டதாரிகளுக்கும் இந்நியமனம் வழங்கப்பட்டது.

இந்நியமனமானது 6 மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலானது என தெரியவருவதுடன் இவர்களுக்கான வேதனமாக மாதாந்தம் பத்தாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் உனைஸ்பாருக், ஜனாதிபதியின் இணைப்பாளர்கள், மூன்று மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், வவுனியா நகர சபை உறுப்பினர் அப்துல் பாரி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

(அ-9-266)

# வடக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களை அநுராதபுரத்தில் அச்சிட நடவடிக்கை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலிருந்து விண்ணப்பிப்பவர்களுக்குரிய சாரதி அனுமதிப்பத்திரங்கள் அனைத்தும் அநுராதபுரத்திலிருந்து அச்சிட்டு உடனடியாக விநியோகிக்கும் நடவடிக்கையை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் உடனடியாக ஆரம்பிக்கவுள்ளது என திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எஸ்.எச்.ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

சாரதி அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிப்பவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் அச்சிடும் நடவடிக்கைகள் தற்போது தென் பகுதிகளில் மட்டுமே உள்ளன.

வட பகுதியிலுள்ளவர்கள் தமது சாரதி அனுமதி அட்டையை பெறுவதற்காக விண்ணப்பிக்கும் போது தற்போது கொழும்பிலிருந்து அனுப்புகின்றனர்.

கம்பஹா, அநுராதபுரம், அம்பாந்தோட்டை, குருநாகல் போன்று மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளையும் தலைமை அலுவலகத்துடன் இணைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வேலைகள் பூர்த்தியானதும் அநுராதபுரத்திலிருந்து வட பகுதிக்கான சேவையை ஆரம்பிக்க முடியும். இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டமும் இணைக்கப்பட்டதுடன் அவர்களுக்கும் இலகுவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடைமுறை அறிமுகப்படுத்தப்படும்.

வருடாந்த வாகன பதிவை புதுப்பிக்கும் போது புகை பரிசோதனை செய்யும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பரிசோதனை செய்து சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படும். (அ-2)






வடமாகாணத்தில் புதிதாக நியமனம் பெற்ற தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள், தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் மங்கல விளக்கேற்றுவதையும் வடமாகாண ஆளுநர் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்க விசேட அதிகாரிகள் நியமிக்கப்படுவர்

## அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு



**சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்தி அவற்றை முற்றாக ஒழிக்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் அனைத்துக் கிராமசேவகர் பிரிவிலும் ஒவ்வொரு விசேட அதிகாரியை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,**

நாடு முழுவதிலுமுள்ள 16 ஆயிரம் கிராம சேவகர் பிரிவுகளிலும் ஒவ்வொரு அதிகாரி நியமிக்கப்படுவார். பட்டதாரி நியமனத்தின் ஊடாக அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.இது தொடர்பாக பொது நிர்வாக அமைச்சுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளன.

இந்த விசேட அதிகாரி கிராம மட்டங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி ஆராய்வார். சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகள் குறித்த முறைப்பாடுகளைப் பெற்று பிரதேச செயலகங்களின் ஊடாக அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்.சிறுவர் துஷ்பிரயோகத்தை கிராம மட்டங்களிலிருந்து தடுப்பதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அதேநேரம் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் சட்டங்களை அமுல்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்கமைய சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டுவருவது தொடர்பில் நீதியமைச்சுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்கள் பிணையில் வெளியே செல்லமுடியாதளவுக்கு சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

பொலிஸ், சிறுவர் மற்றும் மகளிர் விவகாரப் பிரிவின் தகவல்களுக்கு அமைய 2012 ஆம் ஆண்டு மேமாத இறுதிவரை 557 சிறுவர் பாலியல் பலாத்கார சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இக்காலப்பகுதியில் 291 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களும் 318 கடத்தல் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. (அ-2)

# மீன் உற்பத்தியை அதிகரிக்க ஜப்பான் தொழிலதிபர் களத்தில்

இலங்கையின் மீன்பிடி மற்றும் விவசாய துறைகளில் நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்களை முதலீடு செய்ய ஜப்பான் பிரபல தொழிலதிபர் கியோஷி கியூரா முன் வந்துள்ளார். சிறந்த மீன் வளத்தை கொண்டுள்ள இலங்கையில் மீன் உற்பத்தியை அதிகரித்து அவற்றை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்வதே எனது பிரதான இலக்கு எனவும் இலங்கை வந்துள்ள தொழிலதிபர் கிமுரா நேற்று முன் தினம் தெரிவித்துள்ளார். கொழும்பு சினமன்ட் கிரேண்ட ஹோட்டலில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் மீன் வளம் நிறைந்து காணப்படும் இந்நாட்டில் தொழில் நுட்பம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவது கவலையளிப்பதாகவுள்ளது. இலங்கையின் மீன் பிடித்துறையை அபிவிருத்தி செய்தல், மீன் இனங்களின் உற்பத்தியை அதிகரித்தல், மீனவர்களுக்கு அதி நவீன தொழில் நுட்பம் பற்றிய அறிவினைப் பெற்றுக் கொடுத்தல், மீன்பிடித் தொழிலுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை ஸ்தாபித்தல் உள்ளிட்ட பல திட்டங்களை அமுல்படுத்துவதற்காக பல நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்களை முதலீடு செய்ய தான் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். தனது திட்டங்கள் ஒவ்வொன்றையும் இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிக்கவிருப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

இலங்கையில் தயாரிக்கப்படும் மீன்பிடி படகுகள் மற்றும் கப்பல்களை நான் நேரில் சென்று பார்வையிட்டேன். அவற்றை இந் நாட்டு மீனவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதன் மூலம் மீன் விளைச்சலை அதிகரித்து அவற்றை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்ய வழிசமைப்பேனெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். மீன்பிடித்துறை மட்டுமல்லாது விவசாயம், கோழிப்பண்ணை தொடர்பான அபிவிருத்தியிலும் இலங்கைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதற்கு அவர் விருப்பம் தெரிவித்துள்ளார். 56 கப்பல்களுக்கு சொந்தக்காரரான கிமுரா 28 நாடுகளில் 280 நிறுவனங்களை இயக்கி வருகிறார்.

மீன்பிடியமைச்சர் ராஜித சேனாரத்ன அண்மையில் ஜப்பானுப்கு விஜயம் செய்த போது விடுத்த அழைப்பின் பேரிலேயே இவர் இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பலாத்காரம் செய்ய முயன்றவர் மன்னிப்பு கோரினார்

(கொழும்புத்துறை)

பாடசாலை சிறுமியை பலாத்காரம் செய்த குடும்பஸ்தர் அப்பகுதி மக்களால் நையப்புடைக்கப்பட்டார்.

இச்சம்பவம் கொழும்புத்துறை 5 ஆம் குறுக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சிறுமியை குடும்பஸ்தர் பலாத்காரம் செய்ய முற்பட்ட வேளை குடும்பஸ்தரின் மனைவி கூக்குரலிடவே அப்பகுதி மக்கள் அங்கு சென்று அவரை நையப்புடைத்தனர்.

குறித்த குடும்பஸ்தர் எவரிடமும் இது தொடர்பாக முறையிட வேண்டாம். தான் மதுபோதையில் வறு செய்துள்ளதாக மன்னிப்புக் கேட்டார். (அ-3-51)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. சதானந்தன் இராகவானந்தன்**

(B.A.Hons,LL.B.Dip.In.S.W)

கற்கோவளம் பருத்தித்துறையைச் சேர்ந்த அமரர் மு.சதானந்தன் (ஆசிரியர், யா/ ஹாட்லிக் கல்லூரி) மற்றும் செல்வம் தம்பதிகளின் புத்திரன் 11.07.2012 அன்று உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்கின்றார்.இவர் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக தனது பதவியில் மேன்மையடைந்தது போலவே சட்டத் துறையிலும் சிறப்புக்கள் பெற்று மேன்மையடைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
குடும்பத்தினர்

(சி-501)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## MEDIA RESOURCE AND TRANING CENTRE (MRTC)

The Media Resource and training Centre is a joint **venture** of the University of Jaffna and the Institute of Further Education (FOJO), Sweden.

Applications are invited from suitable condidates for the post of **Producer on Contract basis** at the Media Resource and Training Centre, University of Jaffna upto **27.07.2012.**

**Qualifications**

1. Three (3) G.C.E. (Advanced Level) passess in one sitting
2. Credit pass in English at G.C.E. (O/L)
3. At least two years experience in Printing Electronic Media, related to Audio, Video recording and editing.
4. The age limit is 18-35 years
5. Working knowledge in sinhala Language

Salary :**Rs.22,370/- (All inclusive and fixed per month)**
Selection by **Practical Test and Interview**

Generel Conditions:

This is a **full-time assignment** initially for a period of **five months** from the date of commencement of the assignment is renewable if the services rendered and work performance during the tenure of assignment is satisfactory.

The appontee will become a contributor to the Employees Provident Fund (EPF). Media Resources and Training Centre will contribute to EPF and the Employees Trust Fund.

Application forms and other details may be obtained from the **Senior Assistant Registrar/ Academic Establishments,** University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of **Rs. 100/-** per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelop 23x10 c.m. in size.

Applications for the above posts shall be sent to the Senior **Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.**

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Incomplete, illegible applications and applications received after the closing date will be rejected without intimation.

**Registrar**
**2012.07.10**

(C-502)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியை அபிவிருத்தி செய்தால் எல்லாம் சரியாகி விடும்

## அரசின் நினைப்பு இது; பல்கலைக்கழக பிரதிநிதிகள் பிரி. தூதரிடம் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

**அரசாங்கம் இராணுவத்தினூடாக தமிழர் பகுதியில் மேற்கொண்டு வரும் நில அபகரிப்பு தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கினிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் பல தரப்பட்டவர்களுடனும் சந்திப்பினை மேற்கொண்டிருந்தார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளை கிறீன் கிராஸ் தனியார் ஹோட்டலில் நேற்று முன்தினம் மாலை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போதே மாணவப் பிரதிநிதிகளினால் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பு தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வடக்கில் தமிழர்கள் பரம்பரையாக வாழ்ந்த நிலங்கள் அபகரிக்கப்பட்டு அங்கு சிங்கள குடியேற்றம் இடம்பெற்று வருவதாகவும் இதனை எதிர்த்து பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டிய மாணவப் பிரதிநிதிகள், தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்படாத நிலை இலங்கையில் ஏற்பட பிரிட்டிஷ் உதவி செய்ய வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் பல்கலைக்கழக மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கும் பல இடர்பாடுகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் குற்றம் சாட்டினர். இதேவேளை, கடந்த முப்பது வருடயுத்த அழிவுகளிலிருந்து மீண்ட வட பகுதியில் அபிவிருத்திப் பணிகள் மந்த கதியில்தான் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


வீதி அபிவிருத்தி செய்தால் எல்லாம் சரியாகி விடும் என்ற அரசாங்கத்தின் நிலை தமிழர்களின் மனங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், வீதி அபிவிருத்திப் பணிகள் கூட சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை. எல்லாத்துறைகளையும் அபிவிருத்தி செய்வதாக அரசாங்கம் கூறுகின்ற போதும் நடைமுறையில் அவ்வாறு இல்லை.

அத்தோடு மின்சார விநியோகம் மிகவும் சீரற்ற நிலையில் உள்ளது. இதனால் பல்கலைக்கழக மாணவர்கள் முதற்கொண்டு பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் தமது கல்வியை கற்பதில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர் போன்ற பல்வேறு விடயங்கள் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளினால் எடுத்துக் கூறப்பட்டன.

இதேவேளை, மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாகவும் பல விடயங்களை அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்ததாக பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கின் தெரிவித்தார்.

அத்தோடு வீதி அபிவிருத்தி, மின்சாரம் தொடர்பில் தான் சந்தித்தவர்களில் பலர் குற்றச்சாட்டு முன்வைத்ததாகவும் உயர்ஸ்தானிகர் கூறினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் பலாலி படைத் தலைமையகத்தில் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை யாழ். மாவட்ட செயலகத்திலும் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளை போதனா வைத்தியசாலையிலும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் உள்ளிட்ட பல்கலைக்கழக சமூகத்தினரை பல்கலைக்கழகத்திலும் சந்தித்து கலந்துரையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)



அறுகம்குடாவில் ஆயிரக்கணக்கான மீன்கள் இறந்து மிதக்கின்றன. இம்மீன்கள் இறந்தமைக்கான காரணத்தை கண்டறிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு இறந்த மீன்களை உட்கொள்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## பலத்த காற்று வீசும்

(கொழும்பு)

தென்மேற்கு பருவப் பெயர்ச்சி காற்று சூழ்நிலை காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளிலும் சூழவுள்ள கடற்பகுதிகளிலும் பலத்த காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நாட்டின் வடமேல் மற்றும் மேல் மாகாணங்களில் கடல் கொந்தளிப்புடன் காணப்படும்.

இதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் சில இடங்களில் மழை பெய்யக்கூடும் எனவும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ-2)

## 10 அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்களை நியமிக்க முடிவு

(கொழும்பு)

சில நாட்களில் அமைச்சுக்கள் பலவற்றுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்படவுள்ளதாக லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

10 அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்படவுள்ளதுடன் அதற்கான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டு வருகின்றது.

அமைச்சுக்கள் பலவற்றில் உள்ள செயலாளர்களின் பதவிக்காலம் நிறைவு பெறுகின்றமை மற்றும் செயலாளர் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றமை புதிய செயலாளர்கள் நியமனத்திற்கான காரணமாகும்.

இதற்கமைய சிவில் விமான சேவை, கலாசார மற்றும் கலை விவகாரம், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரம், சமூக சேவை, நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தகம், தொழில் மற்றும் வணிக விவகாரம், இளைஞர் விவகாரம் மற்றும் திறன் அபிவிருத்தி, பொதுமக்கள் தொடர்பு மற்றும் பொதுமக்கள் விவகாரம், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு ஆகிய அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## குளவிசுட்டான் வைரவர் ஆலயத்தில் பொங்கல் விழா

(பூந்தோட்டம்)

வவுனியா நெடுங்கேணி குளவிசுட்டான் பழையில் வைரவர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம் இடம்பெறவுள்ளதாக ஆலயத்தின் பரிபாலன சபை அறிவித்துள்ளது.

அன்றைய தினம் பகல் விசேட அபிஷேக ஆராதனைகளும் இரவு பெரும் பொங்கல் திருவிழாவும் இடம்பெறவுள்ளதாகவும் ஆலய கிரியைகளை ஆலய பூசகர் சி.தணிகாசலமும் சி. அமிர்தலிங்கமும் நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர். (அ-9-266)

# வடக்கில் தேர்தலை நடத்த அரசு உரிய சூழலை உருவாக்க வேண்டும்

## அமைச்சர் பசில் அறிவுரை

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தல்கள் வெளிப்படைத்தன்மையுடையதாகவும் மிகச் சரியானதாகவும் அமைய வேண்டுமென பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதமளவில் நியாயமான முறையில் வடக்கில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்தக்கூடிய சாத்தியம் ஏற்படும். ஆயினும் வடக்கில் நடைபெறும் முதலாவது மாகாண சபைத் தேர்தல் மிகவும் சிறந்த முறையில் நடத்தப்பட வேண்டும்.

தேர்தல்களை நடத்தி குற்றச்சாட்டுக்களை சுமக்க நாம் தயாரில்லை.

இதனை நடத்தத் தேவையான சூழ்நிலையை உருவாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இல்லையென்றால் இடம்பெயர் மக்களின் வாக்குரிமையை அரசாங்கம் முடக்கியுள்ளதாக குற்றம் சுமத்தப்படும்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இடம் பெயர்ந்த மக்களில் 95 வீதமானவர்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும் அதற்கு முன்னர் இடம்பெயர்ந்த மூன்று இன சமூகங்களையும் சேர்ந்த மக்கள் இன்னமும் மீள்குடியேற்றப்படவில்லை.

கடந்த மூன்று தசாப்தகாலமாக வடக்கு மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது சகல அரசியல் கட்சிகளும் நியாயமான முறையில் பிரச்சாரங்களை மேற்கொள்ளக்கூடிய ஓர் பின்னணியை உருவாக்க உரிய காலத்தில் தேர்தலை நடத்த வேண்டியது அவசியம் என்பதில் கருத்து கிடையாது என்றார். (அ-2)

## நுவரெலியாவில் நேற்று மண் சரிவு

(ஹற்றன்)


ஹற்றன் நுரெலியாவில் நேற்றிரவு பெய்த கனமழை காரணமாக பிரதான வீதியின் குடாகம பகுதியில் நேற்று அதிகாலை மண் சரிவு ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் வீதியில் இருந்த மண் ஓரளவு அகற்றப்பட்டது. தொடர்ந்து காலை 6.30 தொடக்கம் ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியின் வாகன போக்குவரத்து வழமைக்குத் திரும்பியுள்ளது.

இதேவேளை, மஸ்கெலியா நல்லதன்னி பொலிஸ் பிரிவில் லக்ஸபான தோட்டத்தில் உள்ள நீர்வீழ்ச்சிக்கு அருகே ஏற்பட்டுள்ள மண் சரிவினால் அந்தப் பாதையூடான வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 184



நாகசாகி மீது வீசப்பட்ட ஃபற்மான் என்று அழைக்கப்பட்ட அணுகுண்டு

### இயோ (இவாட்ஸுமா) தீவில் அமெரிக்க இறக்குபடையின் படையிறக்கம்

இவாட்ஸுமா என்பது எரிமலையிலிருந்து தோன்றிய ஒரு தீவு. இதன் பரப்பு 20.3 சதுர கி.மீ. இதில் ஜப்பானியர்களுக்கு இரண்டு விமானத் தளங்கள் இருந்தன. மூன்றாவது கட்டி முடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

படையிருப்பிடத்தில் 23,000 நபர்கள் இருந்தனர்: விமானத் தளங்களிலோ 10 விமானங்கள் மட்டுமே நின்றன. ஆனால், வானிலிருந்து தனது துருப்புகளுக்கு ஆதரவு அளிப்பதற்காக ஜப்பானியர்களால் டோக்கியோவில் விமானத் தளங்களில் இருந்த 3-வது வான்படையின் விமானங்களைப் பயன்படுத்த முடிந்தது.

இவாட்ஸுமா தீவைக் கைப்பற்றுவதற்காக அமெரிக்கப்படைத் தலைமை 3 கடற் காலாட்படை டிவிசன்களையும் ஆர்மி பிரிவுகளையும் ஒதுக்கியது. இவற்றில் 111,000 நபர்கள் இருந்தனர்; 1,522 விமானங்களும் 680க்கும் அதிகமான போர்க் கப்பல்கள், போக்குவரத்துக் கப்பல்கள், இறக்குப்படைக் கப்பல்களும் அடங்கியிருந்தன. படையிறக்க நடவடிக்கையின் பொதுத் தலைமை அட்மிரல் நிமிட்ஸ் வசம் அளிக்கப்பட்டிருந்தது.


ஏன் அமெரிக்கப்படைத் தலைமை இவாட்ஸுமா தீவைக் கைப்பற்ற முடிவு செய்தது? இத்தீவு மரியான் தீவுகளுக்கும் ஜப்பானுக்கும் இடையில், டோக்கியோவிலிருந்து 1200 கி.மீ. தூரத்தில் உள்ளது. மரியான் தீவுகளில் உள்ள அமெரிக்க விமானங்கள் ஜப்பான் மீது குண்டு வீசுவதற்காக சென்று விட்டு திரும்பும் போது இவாட்ஸுமா தீவின் விமானத் தளங்களில் இருந்த ஜப்பானிய சண்டை விமானங்களின் தாக்குதலுக்கு உள்ளாயின. சேதப்படுத்தப்பட்ட அமெரிக்க விமானங்கள் தண்ணீரில் விழுந்தன. விமானிகள் மாண்டனர். இத்தீவை கைப்பற்றியதால் துல்லியமாகவும் குறைவான சேதங் களுடனும் அமெரிக்கர்களால் ஜப் பானை விண்ணிலிருந்து தாக்க முடிந்தது.

படையிறக்கம் ஆரம்பமாவதற்கு முன் ஒருசில மாதங்கள் அமெரிக்கப்போர்த் தந்திர மற்றும் விமானந் தாங்கிக் கப்பல்களின் விமானப்படை விண்ணில் ஆதிக்கத்தை வெல்லும் பொருட்டு இயோ தீவிலும் அருகே இருந்த தீவு களிலும் இருந்த விமானத் தளங் களின் மீது முறை யான தாக்குதலைத் தொடுத்தது.



இவாட்ஸுமா தீவில் அமெரிக்கப்படை கொடியேற்றுகிறது

பெப்ரவரி 19 ஆம் திகதி 3 நாள் பீரங்கிப் படை மற்றும் விமானப்படையின் பூர்வாங்கத் தாக்குதலுக்குப் பின் இயோ தீவின் தென் கிழக்குக் கரையில் ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் படையிறக்கம் ஆரம்ப மாகியது. பலப்படுத்தப்பட்ட நிலை களை ஆதாரமாகக் கொண்ட ஜப் பானியத் துருப்புகள் கடும் எதிர்ப்புக் காட்டின. மார்ச் 16 ஆம் திகதி வாக்கில்தான் இவர்களுடைய எதிர்ப்பு முறியடிக்கப்பட்டு அமெரிக்கர்கள் முழு தீவையும் பிடித்தனர். போது மான விமானப்படை, பீரங்கிப்படை ஆதரவு இல்லாததால், இவர்களுக்கு கணிசமான இழப்பு ஏற்பட்டது. 28,600 நபர்கள் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 6300 பேர் கொல்லப்பட்டனர். அமெரிக்க விமானப்படை 168 விமானங்களை இழந்தது. கடற்படை பிஸ்மார்க் எனும் பாதுகாப்பு விமானந் தாங்கி கப்பலை பறிகொடுத்தது. இது தவிர சரத்தோகா முக்கியத் தாக்குதல் விமானந்தாங்கி கப்பல், பென்சகோலா குரூசர் கப்பல் உட்பட 30 கப்பல்கள் பெரும் சேதமடைந்தன. படையிறக்க நடவடிக்கை ஆரம்பமாகும் முன்னரே ஜப்பானிய கரையோர பீரங்கிப்படை மட்டும் அவசரப் பட்டு வேடிக்கைக் கலைக்காமலிருந்திருந்தால் அமெரிக்கர்களின் சேதங்கள் இன்னமும் அதிகமாக இருந்திருக்கும்.



ஹிரோசீமா மீது வீசப்பட்ட லிட்டில்போய் என்று அழைக்கப்பட்ட அணுகுண்டு

தீவிலிருந்த ஜப்பானியத் துருப்புகளின் தரப்பில் 21,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். 212 நபர்கள் காயமடைந்தனர்.


இவாட்ஸுமா தீவைக் கைப்பற்றியதன் விளைவாய் ஜப்பானிய பொருளாதார, அரசியல் மையங்கள் வரையிலான தூரம் இரு மடங்கு குறைந்து பயண நேரம் 3 மணி நேரமாக மட்டுமே இருந்ததால் இவற்றின் மீது பலத்த தாக்குதல்களைத் தொடுக்கும் வாய்ப்பு அமெரிக்க விமானப் படைக்குக் கிட்டியது. இதன் தொடர்பாய் ஏராளமான அமெரிக்க விமானங் கள் தீவிற்கு அனுப்பப்பட்டன. யுத்தம் முடியும் வரை இத்தீவின் விமானத் தளங்களிலிருந்து 2400 க்கும் குறையாத குண்டு வீச்சு விமானங்கள் இயங்கின.

### ஹோக்கினாவா நடவடிக்கை (1945 மார்ச் 25-ஜூன் 21)

ருக்யூ தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த ஹோக்கினாவா தீவில் அமெரிக்கத் துருப்புகள் இறக்கப்பட்டதுதான் இரண்டாவது உலக யுத்தத்தில், பசுபிக் சமுத்திர போர் அரங்கில் அமெரிக்கா மேற்கொண்ட கடைசி நடவடிக்கையாகும். ஹோக்கினாவா தீவைக் கைப்பற்றி ஜப்பானிற்கு அருகிலுள்ள நுழைவாயில்களை அடைந்து, தலை நாட்டினுள் நுழைவதற்கு அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பது தான் இதன் நோக்கமாகும்.

ஹோக்கினாவா தீவில் (நீளம் 95 கி.மீ.அகலம் 10 கி.மீ.) 77,000 நபர்களைக் கொண்ட 32-வது ஜப்பானியப் படையின் பிரிவுகளும் யூனிட்டுக்களும் தற்காப்பில் நின்றன. இதன் வசம் 90 டாங்கிகளும் பீரங்கிப் படை மற்றும் மார்டர் பீரங்கிப் படை பிரிவுகளும் இருந்தன. கடற்படைத் தளமும் கரையோர பீரங்கிப்படை பேட்டரிகளும் விமான எதிர்ப்பு பீரங்கிப் படைப் பிரிவுகளும் 32-வது படைக்கு கட்டுப்பட்டிருந்தன. 250 விமானங்களை உள்ளடக்கிய 5-வது வான் படை விண்ணிலிருந்து 32-வது படைக்கு ஆதரவளிக்க வேண்டும். அமெரிக்க இறக்குப்படையினரை முறியடிப்பதில் முக்கியப்பங்கு, வெறிகொண்ட படைவீரர்களிடம் இருந்து கூலிக்கு அமர்த்தப்பட்ட மரணப் படையினருக்கு அளிக்கப் பட்டிருந்தது.

## இராணுவ ஜப்பானின் தோல்வி



இவாட்ஸுமா தீவில் சமர்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அவசரத்தால் விளைந்த ஆபத்து

அந்த ஊரில் அந்தணன் ஒருவன் தன் மனைவியுடன் இனிய எளிய வாழ்க்கையை நடத்தி வந்தான். அந்த ஊரிலுள்ள கோயிலில் பூசை செய்வதன் மூலம் கிடைத்த நெல் வருமானமும் அவனுடைய சிறிய நிலத்திலிருந்து கிடைத்த நெல்லும் கொண்டு ஓரளவு நிம்மதியுடன் வாழ்ந்து வந்தான். திருமணமாகிச் சில ஆண்டுகள் ஆன பின்பும் குழந்தை இல்லையே என்ற குறை அந்தத் தம்பதிகளுக்கு இருந்து வந்தது.

எனவே அவர்கள் ஆசையுடன் ஒரு கீரிப்பிள்ளையை வளர்த்து வந்தார்கள். கீரிப்பிள்ளை வந்த வேளையோ என்னவோ அந்தணனின் மனைவி குழந்தை உண்டானாள்.

அதனால் கீரிப்பிள்ளைக்கும் நல்ல பெயர். ஒரு ஆண்டில் அந்தணனின் மனைவி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். தன் அன்பு மகனை வளர்த்து வந்தது போல அந்தக் கீரிப்பிள்ளையையும் வளர்த்து வந்தார்கள்.

அந்தக் கீரிப்பிள்ளைக்குச் சர்வ சுதந்திரம் அளித்திருந்தார்கள். அது எல்லா இடங்களுக்கும் சென்று விளையாடும். அதையும் ஒரு பிள்ளையைப் போலத்தான் அன்புடன் வளர்த்து அதற்குப் பாலும் பக்குவமாக உணவுப் பொருட்களையும் கொடுத்து அன்புடன் பேணி வந்தார்கள்.

அந்தணரின் மனைவி ஆற்றில் சென்றுதான் குடிநீர் கொண்டு வருவாள். ஆற்றிற்கும் வீட்டிற்கும் குறைந்தது அரை மைல் தொலைவு இருக்கும். அவ்விதம் அவள் தண்ணீர் எடுக்கப் போகும் போதும் ஆற்றுக்குச் சென்று குளிக்கப் போகும்போதும் குழந்தையைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை அவள் தன்னுடைய கணவனிடம் ஒப்படைத்துச் செல்வாள். அன்றும் அவள் இல்லாத சமயத்தில் அவளுடைய கணவன் தான் குழந்தையைப் பார்த்துக் கொண்டான்.

அவன் வீட்டிற்கு வெளியே வரவும் ஒரு அந்தணர் விரைவாகச் சென்று கொண்டிருந்தார். அவர் போகும் போது என்ன சுவாமி உமக்குத் தெரியாதா?



இன்னைக்கு நம்ம ராஜா அவருடைய அம்மாவுடைய திதியை ஒட்டி பிராமணர்களுக்கெல்லாம் ஆளுக்கு ஒரு பொற்காசு கொடுக்கிறாராமே! வாரும் வந்து வாங்கிட்டு வந் திடலாம் என்று கூறவும் இந்த ஏழை அந்தணனும் புறப்பட் டான்.

குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பைத் தன் அன்புக் கீரிப்பிள்ளையிடம் ஒப்படைத்தான். அந்தக் கீரிப்பிள்ளையிடம் கூறி விட்டோம். அது தொட்டிலில் கிடக்கும் குழந்தையைப்பார்த்துக் கொள்ளும் தன். மனைவி வருவது வரை என்ற நம்பிக்கையுடன் அந்த அந்தணன் புறப்பட்டுச் சென்றான் அரண்மனைக்குப் பொற்காசு பெறும் ஆவலில்.

கீரிப்பிள்ளை அனைவரிடமும் நன்கு பழகி விட்டதால் இருவரும் வீட்டில் இல்லை என்பதை உணர்ந்து குழந்தையின் தொட்டிலருகில் காவல் இருந்தது. அப்போது அங்கு வந்த கருநாகப் பாம்பிடமிருந்து குழந்தையைக் காப்பாற்றும் எண்ணத்தில் அதனுடன் போரிட்டு அதன் தலையைத் துண்டாடி விட்டது.

## பஞ்ச தந்திரக் கதைகள்

அவ்விதம் பாம் புடன் போரிட்டபோது கீரிப்பிள்ளையின் வாயெல்லாம் இரத்தம் படிந்திருந்தது.

ஆற்றிற்குச் சென்று தண்ணீர் குடத்துடன் அந்தணனின் மனைவி வருவதைத் தெரிந்து கொண்ட கீரிப்பிள்ளை நடந்ததைக் கூற வேண்டும் என்ற ஆவலில் விரைந்து வாசல் அருகே வரவும் கீரிப்பிள்ளையின் வாயில் இரத்தக்கறையைக் கண்ட அவள் எண்ணம் வேறாகச் சென்றது. தன் குழந்தையை இந்தக் கீரிப்பிள்ளை கடித்துக் கொன்று விட்டது என்றே எண்ணி விட்டாள்.

உன்னையும் இன்னொரு பிள்ளை போலத்தானே எண்ணி வந்தேன். பாவி இவ்விதம் செய்து விட்டாயே என்று கூறி மனைவி தண்ணீர்க் குடத்தை அதன் தலையில் போட்டு விட்டாள். பின்னர் பரபரப்புடன் உள்ளே சென்று பார்க்கவும் குழந்தை தொட்டிலிலிருந்து அப்போதுதான் எழுந்திருந்ததையும் தொட்டிலின் கீழே பாம்பின் தலை துண்டாகக் கிடந்ததையும் கண்டு ஐயோ அவசரப்பட்டு இவ்விதம் செய்து விட்டேனே அந்தக் கீரிப்பிள்ளைதான் என் குழந்தையைக் காப்பாற்றியிருக்கிறது அந்தப் பொல்லாத பாம்பிடமிருந்து என்பதைத் தெரியாமல் இவ்விதம் செய்து விட்டேனே என்று கூறி கண்ணீர் வடித்தவண்ணம் குழந்தையுடன் வெளியே வரவும் பொற்காசு பெற்ற அந்தணன் மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வரவும் மனைவி குழந்தையுடன் கண்ணீர் வடித்துக் கொண்டு நிற்கவும் வாசலில் தண்ணீர் குடமும் தலை நசுக்கப்பட்ட கீரிப்பிள்ளை இறந்து கிடக்கவும் அந்தணனுக்குத் திகைப்புக்கு மேல் திகைப்பு ஏற்பட்டு எதையும் சொல்லமுடியாமல் நின்று விட்டான். பின்னர் அந்தணனுடைய மனைவி கண்ணீரைத் துடைத்தவளாய் தன் கணவனை உள்ளே அழைத்துச் சென்று அனைத்தையும் கூறிட அவன் பெரி தும் வருந்தினான்.

குடும்பத்திலுள்ள வறுமையைப் போக்கிட அரண்மனை சென்று பொற்காசு வாங்கப் போனதுதான் தவறு என்று அந்தணன் வருந்திக் கண்ணீர் வடிக்கவும் அவசரப்பட்டு தண்ணீர்க்குடத்தை கீரிப்பிள்ளையின் தலையில் போட்டு அநியாயமாகக் கொன்றுவிட்டோமே என்று அந்தணனின் மனைவி கண்ணீர் வடிக்கவும் அதன்பின்னர் என்ன செய்யமுடியும்! அவசரம் அவளுடைய கண்களை மறைத்துவிட்டது. பின்னர் வருந்திய முடிவில் பயனேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்களை கண்காணிக்க வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள்

## வலியுறுத்துகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில் அதனைக் கண்காணிப்பதற்கு வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல் ஆணையாளருக்கும் கட்சி செயலாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை தேர்தல் கடமையில் ஈடுபடுத்தக்கூடிய சாத்தியங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் நம்பிக்கை இல்லை எனவும் நியாயமான முறையில் தேர்தல் நடத்தப்படக்கூடிய சாத்தியம் கிடையாது எனவும் ஐக்கிய தேசியக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை கடமையில் ஈடுபடுத்துவதன் மூலம் நியாயமானதும் சுதந்திரமானதுமான தேர்தல் முடிவுகளை எதிர்பார்க்க முடியும் என அக்கட்சி தெரிவித்துள்ளது. (அ-2)

# யாழ்ப்பாணத்தில் முறைப்பாட்டு பெட்டிகள் அமைக்க தீர்மானம்

யாழ்ப்பாணத்தில் நகரை எவ்வாறு அபிவிருத்தி செய்ய வேண்டும், அங்கு நிலவும் குறைபாடுகள் தொடர்பில் தமது ஆலோசனைகள் மற்றும் முறைப்பாடுகளை மக்கள் சொல்லக் கூடிய வகையில் முறைப்பாட்டுப் பெட்டிகள் அமைக்கப்படவுள்ளன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு அமைய இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண நகரின் முக்கிய இடங்களில் இந்த முறைப்பாட்டு பெட்டிகள் அமைக்கப்படவுள்ளன. நகரத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள மாநகரசபை நிர்வாகம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அமைச்சர் கோரியுள்ளார்.

யாழ்ப்பாண நகர வர்த்தகர்களிடம் எவரேனும் கப்பம் கோரினால் உடனடியாக பொலிஸாருக்கு அல்லது தமக்கும் அறிவிக்குமாறு அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கனேடிய நீதிமன்றத் தீர்ப்பிற்கு இலங்கை கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

கனேடிய நீதிமன்றமொன்றில் அளிக்கப்பட்ட தீர்ப்பு தொடர்பில் இலங்கை அரசாங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

முறைப்பாட்டாளர்கள் மற்றும் சாட்சியாளர்கள் இன்றி இலங்கைக் கடற்படையினர் போர்க்குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக கனேடிய நீதிமன்றமொன்று தீர்ப்பளித்துள்ளது.

அரசியல் தஞ்சம் கோரி இலங்கையின் முன்னாள் தமிழ் கடற்படை உத்தியோகத்தர் ஒருவர் கனேடிய குடிவரவு அமைச்சருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணைகளின் போது இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படவில்லை. அரசியல் புகலிடம் கோரிய நபர் ஒரு பொய்க்காரர் என தீர்மானித்துள்ள கனேடிய நீதிமன்றம் கடற்படையினர் போர்க் குற்றச் செயல்களில்ஈடுபட்டதாகவும்குறிப்பிட்டுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பு முற்றுமுழுதாக ஒரு தலைப்பட்சமானது என இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (அ-2)



வட்டுக் கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலய தேர்த் திருவிழாவின் போது...




★ 1346-லக்சம்பேர்க்கின் நான்காம் சார்ள்ஸ் புனித ரோமப் பேரரசன் ஆனான்.

★ 1576-மார்ட்டின் புரோபிஷர் கிரீன்லாந்தைக் கண்டார்.

★ 1735-புளூட்டோ சூரியனுக்கு அண்மையாக 9-ம் இடத்தில் இருந்து 8-ம் இடத்துக்கு இந்நாளில் வந்ததாக கணித கணக்கீடுகள் தெரிவித்தன. இது பின்னர் 1979-ல் மீண்டும் நிகழ்ந்தது.

★ 1740-யூதர்கள் சிறிய ரஷ்யாவில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

★ 1776- கப்டன் ஜேம்ஸ் குக் தனது மூன்றாவது கடற் பயணத்தை ஆரம்பித்தான்.

★ 1796-மிச்சிகனின் தலைநகர் டிட்ராயிட் நகரை பிரித்தானியாவிடம் இருந்து ஐக்கிய அமெரிக்கா ஜே உடன்படிக்கையின்படி பெற்றுக் கொண்டது.

★ 1811-வளிமங்களின் மூலக்கூறுகள் பற்றிய தமது குறிப்புக்களை இத்தாலிய அறிவியலாளர் அவகாதரோ வெளியிட்டார்.

★ 1859-இரு நகரங்களின் கதை என்ற நாவலை சார்ள்ஸ் டிக்கன்ஸ் வெளியிட்டார்.

★ 1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படையினர் வாஷிங்டன் டிசியைத் தாக்க முயற்சித்தனர்.

★ 1882-பிரித்தானிய மத்தியதரைக் கடற்படையின் எகிப்தின் அலெக்சாண்டிரியா நகர் மீது குண்டுத் தாக்குதலை ஆரம்பித்தனர்.

★ 1893-முதன்முறையாக ஜப்பானைச் சேர்ந்த கொக்கிச்சி மிக்கிமோட்டோ செயற்கையாக முத்துக்களை வளர்க்கும் முறையொன்றை அறிமுகப்படுத்தினார்.

★ 1895-லூமியே சகோதரர்கள் அறிவியலாளர்களுக்கு திரைப்படம் ஒன்றைக் காண்பித்தனர்.

★ 1921-மங்கோலியா சீனாவிடமிருந்து விடுதலை பெற்றது.

★ 1936-நியூயோர்க் நகரில் டிறைபரோ பாலம் திறக்கப்பட்டது.

★ 1943-போலந்தில் வொல்ஹீனியா என்ற இடத்தில் நாசி ஜேர்மனியரினால் ஆயிரத்துக்கும் அதிகமான போலந்து மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1973-பிரேசில் போயிங் விமானம் பாரிசில் விபத்துக்குள்ளாகியதில் 134 பேரில் 123 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1979-ஸ்கைலாப் விண்வெளி நிலையம் பூமிக்குத் திரும்பியது.

★ 1982-இத்தாலி மேற்கு ஜேர்மனியை 3:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து உலக கால்பந்துக் கிண்ணத்தை வென்றது.

★ 1987- உலக மக்கள் தொகை 5 பில்லியனைத் தாண்டியது.

★ 1990-கொக்காவில் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டது.

★ 1991-ஹஜ் பயணிகளை ஏற்றிச் சென்ற விமானம் சவுதி அரேபியாவில் விபத்துக்குள்ளாகியதில் 261 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1995- வியட்நாமிற்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் முழுமையான தூதரக உறவுகள் ஆரம்பமாகின.

★ 1995-சேர்பிய இராணுவம் பொஸ்னிய நகரான சிரெப் ரென்னிக்காவைத் தாக்கியதில் 8 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006-மும்பை ரயில் குண்டு வெடிப்புகள்: மும்பாயில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புகளில் 200 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2007-குடும்பிமலை புலிகளின் முகாம் வீழ்ச்சியடைந்தது.

பிறப்புக்கள்

★ 1920-வி.ஆர்.நெடுஞ்செழியன், தமிழக அரசியல்வாதி

★ 1966-பாலா, தமிழ் திரைப்பட இயக்குநர்


சிறப்பு நாள்

★ உலக சனத்தொகை தினம்

**உலக மக்கள் தொகை நாள்** என்பது ஆண்டுதோறும் ஜூலை 11இல் மக்கள் தொகை குறித்த விழிப்புணர்வை உலகளாவிய ரீதியில் மக்களுக்கு எடுத்துச் செல்லும் ஒரு முயற்சியாக ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தினால் கொண்டாடப்பட்டுவருகிறது.

உலக மக்கள் தொகை வளர்ச்சியானது கி.பி. 1650-ம் ஆண்டிற்குப் பின்னர்தான் விரைவாக வளரத் தொடங்கியது. 1840-ல் 100 கோடி மக்கள் தொகையாகவும், 1927-ல் 200 கோடி மக்கள் தொகையாகவும் வளர்ச்சியடைந்திருந்தது. எனினும் 1960-ல் 300 கோடி மக்கள் தொகையினை 39 ஆண்டுகளிலேயே எட்டியிருந்ததுடன் 1999-ம் ஆண்டில் 600 கோடி மக்கள் தொகையினை அடைந்திருந்ததாக குடித்தொகை மதிப்பீட்டுப் பணியகத்தின் அறிக்கை தெரிவித்திருக்கின்றது. மக்கள் தொகை வளர்ச்சி வீதமானது ஆண்டு தோறும் 1.31 வீதத்தால் அதிகரித்து வருகின்றது. ஒவ்வொரு செக்கனுக்கும் 2.582 வீதமாகவும் ஒரு நாளுக்கு 223,098 தொகையாகவும், ஒரு வருடத்திற்கு 81,430,910 ஆகவும் அதிகரித்துச் செல்கின்றது.

ஆபிரிக்க நாடுகள் சிலவற்றில் தற்போதைய வளர்ச்சியானது 13 வீதத்திலிருந்து அடுத்த 300 ஆண்டுகளில் 24 வீதமாக அதிகரிக்கின்ற பொழுதிலும் ஐரோப்பாவில் 12 வீதத்திலிருந்து 7 வீதமாகக் குறையுமென எதிர்வு கூறப்படுகின்றது.



பாலா ஒரு குறிப்பிடத்தகுந்த தமிழ்த் திரைப்பட இயக்குநர். பாலுமகேந்திராவிடம் திரைப்படக் கலை பயின்றவர். இவர் இயக்கிய திரைப்படமான பிதாமகனில் நடித்த விக்ரம், நடிப்புக்கான இந்திய தேசிய விருது பெற்றார்.

பி ஸ்டுடியோ என்ற நிறுவனத்தின் பெயரில் திரைப்படத் தயாரிப்பிலும் ஈடுபட்டுள்ளார். நான் கடவுள் திரைப்படத்துக்காக 2008ஆம் ஆண்டின் சிறந்த திரைப்பட இயக்கத்துக்கான இந்திய தேசிய விருதைப் பெற்றுள்ளார். இவர் இயக்கிய திரைப்படங்கள் சேது (1999), நந்தா (2001), பிதாமகன் (2003), நான் கடவுள் (2009), அவன் இவன் (2011).



இரா. நெடுஞ்செழியன் (ஜூலை 11, 1920 –ஜனவரி 12, 2000) தமிழக அரசியல்வாதியும் இலக்கியவாதியும் ஆவார். இவர் தமிழகத்தின் நிதி அமைச்சராகவும் சிறிது காலம் மாற்று முதலமைச்சராகவும் பதவி வகித்தவர். இவர் நாவலர் என்றும் அழைக்கப்படுவார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டு இருந்த இவர், பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு 1944ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார். இவ்வியக்கம் நீதிக் கட்சியோடு இணைக்கப்பட்டு திராவிடர் கழகம் உருவானபோது அதில் தொடர்ந்தார். பேரறிஞர் அண்ணா 1949-ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கியபோது அக்கட்சியின் ஐம்பெரும் தலைவர்களில் (அண்ணா, ஈ வெ.கி.சம்பத், நெடுஞ்செழியன், என்.வி.நடராசன், க.மதியழகன்) ஒருவராகத் திகழ்ந்தார். 1957 – 1962-ம் ஆண்டுகளில் அக்கட்சியின் இரண்டாவது பொதுச் செயலாளராக பதவி வகித்தார். அண்ணாவின் மறைவிற்குப் பின்னர் 1975 ஆம் ஆண்டு வரை மீண்டும் பொதுச் செயலாளராகப் பதவி வகித்தார்.

பின்னர் அவரின் அரசியல் வாழ்வு சறுக்கல்கள் நிறைந்ததாகவே காணப்பட்டது.

அண்ணா இறந்தபோதும், எம்.ஜி.ஆர். இறந்தபோதும் இடைக்கால முதலமைச்சராக பதவி வகித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச பயங்கரவாதம் இன்னும் எத்தனை நிமலரூபன்களைப் பலிகொள்ளுமோ....!

தமிழரின் காணிகளை பலவந்தமாக அபகரிப்பது, புத்தர் சிலையை பலவந்தமாக அமைப்பது, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ தேவாலயம் அழிப்பது, ஜனநாயகப் போராட்டங்களுக்கு தடை விதிப்பது, தமிழர்களைக் கண்ட இடங்களில் தாக்கி குற்றுயிராக்குவது போன்ற தமிழின அழிப்பு நடவடிக்கைகள் அனைத்துமே பயங்கரவாதச் செயல்களாகும்.

வவுனியாவில் தமிழ் அரசியல் கைதிகள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான நடவடிக்கைக்கு இதுவரை சர்வதேச மனித உரிமை அமைப்புகளோ ஐ.நா. சபையோ மனித உரிமையை நேசிக்கும் நாடுகளோ கண்டனம் தெரிவிக்காதது பெரும்வியப்பை ஏற்படுத்துகிறது. வவுனியா சம்பவம் தொடர்பாக அரசு சில பொய்யான தகவல்களை வெளியிட்டுள்ளது. அதில் மிக முக்கியமாக, மூன்று சிறை அதிகாரிகள் அரசியல் கைதிகாளால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்ததாக வெளியான செய்தி.

அந்தச் செய்தியை இலங்கையின் சகல ஊடகங்களும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன. அதனை உலக செய்தி நிறுவனங்களும் உண்மையென நம்பி வெளியிட்டுள்ளன. ஆனால், அந்த செய்தி கைதிகளைத் தாக்குவதற்காகவே திரிபுபடுத்தப்பட்ட செய்தியாகும். தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதை நிறுத்த வேறுவழியின்றி தந்திரமான இந்தக் கதையை முன்னிறுத்தி முறியடிப்பு நடவடிக்கையை இராணுவப் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

அதற்கு முன்னதாக அநுராதபுர நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணை தொடர்பாக அழைத்துச் செல்லப்பட்ட மூன்று தமிழ் அரசியல் கைதிகள் மீண்டும் வவுனியா சிறைச் சாலைக்கு அழைத்துவரப்படவில்லை. அவர்களில் ஒருவர் அநுராதபுர சிறையில் வைத்து கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். அதாவது, தாக்குதலுக்கு இலக்கானவரின் உடலில் மல அழுக்குகளை ஏற்படுத்தி அதனைக் கழுவவிடாமல் மூன்று நாட்கள் பட்டினி போட்டிருந்தனர். இறுதியில் அவர் அதிகாரிகளின் காலில் கும்பிட்டு விழுந்தபோதும் கருணை காட்டப்படவில்லை.

இந்த செய்தி வவுனியா அரசியல் கைதிகளுக்கும் தெரியவந்ததை அடுத்து அவரை மீண்டும் வவுனியாவுக்கு கொண்டுவருமாறு கோரியே உண்ணாவிரதப் போராட்டம் இடம் பெற்றது. அதனை முறியடிக்கவே இந்த நாடகம் நடத்தப்பட்டது. ஆயுதங்கள் மாத்திரமல்ல, ஒரு குச்சித் தடிகூட இல்லாத அரசியல் கைதிகளிடம் பெரும்போர் நடத்தியே சிறைக் காவலர்களை மீட்டதாக பெரிய பரப்புரை செய்யும் இலங்கை அரசு, மீண்டும் விடுதலைப்புலிகள் வந்துவிட்டதைப் போன்றதொரு நிலையை சிங்கள மக்களுக்கு காட்ட முயற்சித்துள்ளது.

**வீ.ஆர்.வரதராஜா**
**நன்றி: இணையம்**

வவுனியா கடையொன்றில், மண்வெட்டிக்குப் பயன்படுத்தும் குண்டான் தடிகளை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் வாங்கியுள்ளனர். அந்தத் தடிகளை பயன்படுத்தியே நிராயுதபாணிகளாக படுத்திருந்த 38 தமிழ் அரசியல் கைதிகளும் தாக்கப்பட்டுள்ளனர். படுமோசமான தாக்குதல் காயங்களுக்கு இலக்கானவர்களை அநுராதபுரம் சிறைச்சாலை நோக்கி அழைத்துச் சென்றுள்ளனர்.

அவர்களில் ஒருவர்கூட தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல. எனவே, அவர்களைப் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் தொடர்ந்தும் தடுத்துவைத்திருக்க முடியாது. ஆனால், விடுதலை செய்யவும் முடியாது என்பதே அரசின் நிலைப்பாடு.

மிகக் கடுமையாக- மனித நேயமற்ற முறையில் தமிழர் என்பதற்காக தாக்கப்பட்ட 38 பேரில் பலரின் கால், கைகளில் மோசமாக எலும்பு முறிவுகள் ஏற்பட்டுள்ளன. அவற்றில் மிக மோசமான நிலையில் தாக்கப்பட்ட 20 இளைஞர்கள் ராஹம சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். ஏனையோர் கண்டி, போகம் சிறைச் சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும் சிலர் அநுராதபுரம் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

ராஹம சிறையில் வைக்கப்பட்டவர்களில் மிகமோசமான நிலையில் இருந்த நிமலரூபன் இரவிரவாக தம்மை மருத்துவ விடுதிக்கு கொண்டு செல்லுமாறு கேட்டும் சிறை அதிகாரிகள் எவ்வித கவனமும் எடுக்கவில்லை. விடியும்போது அவர் மரணமடைந்துவிட்டதை அதிகாரிகள் கண்ணுற்றுள்ளனர். இறந்த உடலைக் கொண்டு சென்று ராஹம மருத்துவ விடுதியில் ஒப்படைத்துள்ளனர். *நிமலரூபனின் மரணம் ஒரு அப்பட்டமான கொலை.* அதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டும். அவரின் உடலில் எலும்பு முறிவு இல்லாத இடமே இல்லையென குறிப்பிடப்படுகின்றது.



## தமிழ் அரசியல் கைதிகளைக் காப்பாற்ற, உலகம் நடவடிக்கை எடுக்குமா..?



ஆனால், அவர் இருதய நோய் காரணமாகவே மரணம் அடைந்ததாக சிறைச்சாலைக்குப் பொறுப்பான அமைச்சர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார். வைத்திய பரிசோதனைக்கு முன்பு அதனை எப்படி நீங்கள் குறிப்பிட முடியும் என எதிர்க் கட்சியினர் கேட்டபோது, அமைச்சர் சமாளித்தார். எனவே, அவர் இருதய நோய் காரணமாகவே மரணமானார் என வைத்திய அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு அரசு முயல்கின்றது என்பது இதிலிருந்து தெரிகின்றது. அதேநேரத்தில் மகனின் உடலைத் தருமாறு கோரி கொழும்பு சென்ற நிமலரூபனின் பெற்றோர் காவற்துறையினரால் கைது செய்யப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

நிமலரூபனின் சடலத்தை அவரின் சொந்த இடமான நெல்லுக்குளத்திற்கு கொண்டு போவதானால், இலங்கை சோஷலிச குடியரசின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படும் என இலங்கைக் காவற்துறையினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்; கொட்டான் தடியால் அடித்து எலும்புகளை முறித்து நிமலரூபனைக் கொலை செய்யும்போது தேசிய பாதுகாப்பைப் பற்றி சிந்திக்காத அரசு, அவரின் உடலை அடக்கம் செய்யும்போது மாத்திரம் கவலைப் படுகின்றது.

அவரின் உடலைப் பெறுவதற்கு வந்த பெற்றோரை சிறையில் அடைத்து வைத்துவிட்டு, கொழும்பு நீதிமன்றத்தில் வந்து காவற்துறையினர் மனு செய்துள்ளனர். அவர்களின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் ஆஜராகி கட்சிக்காரரைத் தேடுகிறார். காவற்துறையினரின் வேண்டுதலை ஏற்று நிமலரூபனின் சடலத்தை கொழும்பில் அடக்கம் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆனால், இந்த உத்தரவு அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். நிமலரூபன், பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு சாதாரண கைதி. அவரின் சடலத்தை அவரின் சொந்த இடமான வவனியா நெல்லுக் குளத்தில் அடக்கம் செய்வதனால், எவ்வாறான அச்சுறுத்தல், தேசிய பாதுகாப்பிற்கு ஏற்படப்போகிறது என்பதனை காவற்துறையினரும் குறிப்பிடவில்லை. நீதிபதியும் அதைப் பற்றி கேள்வி எழுப்பவில்லை.

கொழும்பு நீதிமன்றத்தில் நிமலரூபனின் மரண விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. அவரின் மரணம் கொலையா? தற்கொலையா? இயற்கை மரணமா? என்று நீதிபதியும் கேட்கவில்லை. என்றோ, நீதி செத்துவிட்ட இலங்கையில் இன்னும் எத்தனை நிமலரூபன்களோ...?

விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவராக நிமலரூபன் செயற்பட்டார் என முழுப் பொய் ஒன்றையும் காவற்துறையினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். பல ஆண்டு காலமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிமலரூபனைப்பற்றி இதுவரை சிங்கள அரசு இதனை வெளியிடாததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

*தமது மகனின் சடலத்தையாவது தம்மிடம் ஒப்படைக்கும்படி நிமலரூபனின் தாயார் நீதிமன்றத்தில் கதறி அழுது கேட்டபோதும், கொழும்பு கடவத்தை மயானத்தில் அதனை அடக்கம் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவில் குறிப்பிட்டுள்ளது.*

ஏற்கனவே தமது கட்சிக்காரரை காணவில்லையென சட்டத்தரணி குறிப்பிட்டதை அடுத்தே, நிமலரூபனின பெற்றோர் நீதிபதியின் உத்தரவின் பெயரில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளையில் அரசியற் கைதிகளை விடுவிக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட மக்கள் கண்காணிப்புக் குழு இவ்விடயத்தில் இலங்கை அரசின் செயலைக் கண்டித்து கடும் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளது.

முதலில் வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் மனித உரிமையாளர்களையும் அழைத்து இலங்கை அரசின் மிகமோசமான மனித உரிமைமீறல் குறித்து சகல தகவல்களையும் வெளியிட்டுள்ளது. இதன்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் முன்னின்று சகல தகவல்களையும் உறுதிப்படுத்தியது.

அதேநேரத்தில் இலங்கை அரசினால் அடித்துக் கொலை செய்யப்பட்ட நிமலரூபனின் சடலத்தைப் பெறுவதற்கு, பெற்றோரின் ஆதரவுடன் உயர்நீதிமன்ற நடவடிக்கைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சித்து வருகின்றது.

இலங்கை அரசாங்கங்கள் உலகில் எல்லா சட்டங்களையும், நீதி நியாயங்களையும் மீறி நடந்தாலும், அந்நாட்டுக்கு எதிராக இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. சிறையில் இருந்தவர் இம்முறை அரச அதிகாரிகளினாலேயே அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

இதற்கும் ஒரு கதையை சோடிக்க அரசு தீவிரமாக முயன்று வருவதாகத் தெரிகின்றது. அவர் கூறும் கதையை உலக நிறுவனங்களும் ஏற்றுக் கொண்டாலும், வியப்படைவதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுங்கட்சி அமைச்சர்களின் உறவுகள் தேர்தல் களத்தில் குதிக்கின்றனர்

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட அமைச்சர்களின் உறவினர்கள் பலர் விண்ணப்பித்துள்ளனர்.

அமைச்சர் அதாவுத செனவிரத்னவின் மகன், அமைச்சர் சந்திரசேனாவின் சகோதரர், அமைச்சர் ஜெயதிஸ்ஸ ரணவீரவின் மகன், அமைச்சர் ஜெகத் பாலசூரியவின் மகன், அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரின் மகன், பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவின் சகோதரி, அமைச்சர் அதாவுல்லாவின் மகன், அமைச்சர் ஜோன் செனவிரத்னவின் மருமகன், பிரதி அமைச்சர் கருணாவின் சகோதரி, உள்ளிட்ட பலர் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்துள்ளனர்.

இந்தத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட விண்ணப்பித்த 467 பேருக்கு கடந்த வெள்ளிக்கிழமை நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் ஆளும் கட்சியின் சார்பில் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்களுக்கு இந்தத் தேர்தலில் வாய்ப்பளிக்கப்படாது என்று சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

எனினும் நேர்முகத் தேர்வுக்குப் பின்னர் கருத்து வெளியிட்டுள்ள அவர், அமைச்சர்களின் உறவினர்கள் தொடர்பான இறுதி முடிவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மத்திய குழுவே மேற்கொள்ளும் என்று குறிப்பிட்டார். (அ-2)

# மலையகப் பகுதிக்கு நூறு தபாற்காரர்கள் நியமனம்

(கண்டி)

மலையகத்திற்கென புதிதாக 100 தபாற்காரர்களுக்கான நியமனம் விரைவில் வழங்கப்படவுள்ளதாக தபால்சேவைகள் அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர்மேலும் தெரிவிக்கையில், நீண்டகாலமாக மலையகத்தில் தபால் விநியோகத்தில் நிலவிவரும் குறைபாடுகளுக்கு உடனடி தீர்வு காணும் வகையிலேயே புதிதாக இவர்களுக்கான நியமனம் வழங்கப்படவுள்ளன.

மலையகத்தில் தபால் விநியோகத்திற்கென 500 தபாற்காரர்களை நியமிப்பதற்கான அங்கீகாரம் ஏற்கனவே கிடைத்திருந்தபோதிலும் சுமார் 3 வருடங்களுக்கு முன்னால் மலையகத்தைச் சேர்ந்த 400 இளைஞர்களுக்கு மாத்திரமே தபாற்காரர் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் தபால் விநியோகத்தில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் எஞ்சிய 100 தபாற்காரர்களுக்கும் நியமனங்களை வழங்க அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீட்டினை பெற்றுத் தருமாறு திறைசேரியிடம் கோரியுள்ளது.

ஏற்கனவே மலையகத்திற்கென தபாற்காரர்களாக நியமிக்கப்பட்டவர்கள் படிப்படியாக அரசாங்கம் உத்தியோகத்தர்களாக உள்வாங்கப்படுவரெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இணைப்புச் செயலாளராகிறார் பாரதலக்ஸ்மனின் மனைவி

முல்லேரியாவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மரணமடைந்த பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மனைவியார் ஜனாதிபதி ராஜபக்ஷவின் இணைப்புச் செயலாளர் பதவியை ஏற்றுக்கொண்டுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமது தந்தை இழப்பு ஏற்பட்டு பல மாதங்கள் கழிந்துள்ள நிலையில் அரசிடம் ஒப்படைக்க வேண்டிய உத்தியோகபூர்வ வீடு மற்றும் வாகனம் என்பனவற்றை தொடர்ந்தும் தக்க வைக்கும் நோக்கில் தமது தாய் ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் பதவியை ஏற்றுக் கொண்டுள்ளார் என ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளதாக கொழும்பு இணையம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த உத்தியோகபூர்வ வீடு, வாகனம் என்பவை தொடர்ந்தும் எமது பாவனைக்கு தேவைப்படுவதன் காரணமாக தனது தாய் ஜனாதிபதியைச் சந்தித்து இது குறித்து கோரிக்கையை முன்வைத்தார்.

அதன்போது தனது தாயாரினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்தே குறித்த பதவியை அவர் ஏற்றுக்கொண்டார் என ஹிருணிகா கூறியுள்ளார்.

பாரத லக்ஷமன் பிரேமச்சந்திரன் ஜனாதிபதி ஆலோசகராக செயற்பட்டதால் கொழும்பு 07 கெப்பிடிபொல மாவத்தையில் சமிட் குடியிருப்பில் உத்தியோகபூர்வ வீடும் வாகனமும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நிதிக் கொள்ளையில் ஈடுபடவே அரசாங்கம் தேர்தலை நடத்துகிறது

## ஐ.தே.க குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடு முழுவதும் இடம்பெறும் குற்றச் செயல்கள் பலவற்றால் பிள்ளைகளுக்கு வீதியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிற்கே பகிரங்கமாக சொல்லக்கூடிய அளவிற்கு நிலைமை மாறியுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அரசுடன் தொடர்புடைய மதம் பிடித்த பிரதேச அரசியல்வாதிகள் பூ போன்ற பிள்ளைகளை அண்மையில் பலிக்கடாவாக்கிய சம்பவங்களை பார்க்கும் போது நாட்டின் நிலை வெளிப்படுவதாக் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குற்றத்துடன் தொடர்புடைய அரசுடன் இணைந்துள்ளவர்களே மக்களை படுகுழியில் தள்ளியுள்ள இந்த அரசு நிதி கொள்ளையில் ஈடுபடவென உரிய காலத்திற்கு முன்னர் மாகாணசபை தேர்தலை நடத்தவுள்ளது.

இவ்வாறு மக்கள் பணத்தை வீணடிக்கும் அரசின் ஆயுள் காலம் குறித்து இன்று பிரச்சினை ஏற்பட்டுள்ளதென அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# மலச்சிக்கல் நீங்க மூலிகை மருத்துவம்

மனிதனை வாட்டும் நோய்களில் மலச்சிக்கலும் ஒன்று. எளிதில் ஜீரணிக்க முடியாத உணவுகளை உண்பதாலும் நேரம் தவறி உண்பதாலும் இரவு தூக்கமில்லாதவர்க்கும் வயது முதிர்ந்தவர்க்கும் உடலுழைப்பு இல்லாமல் உட்கார்ந்தே இருப்பவர்கட்கும் தினமும் போதியளவு தண்ணீரைப் பருகாமல் இருப்பதாலும் உண்ணும் உணவில் மோர், காய்கறிகள், கீரைகள், பழங்கள் ஆகியவை அதிகளவில் சேர்த்துக் கொள்ளாதவர்கட்கும் இந்நோய் தோன்றும்.

எப்போதும் அசைவ உணவு உண்பவர்களுக்கும் இந்நோய் ஏற்படலாம். எப்




போதும் மலச்சிக்கல் தான் மரணத்திற்கு முதற்படி என்று மருத்துவ அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இதைத்தடுக்க எளிதில் ஜீரணிக்கக்கூடிய உணவுகளையும் கீரைகள், பழங்கள் இவைகளை அடிக்கடி சாப்பிட்டும் நார்த் தன்மையான உணவுகளை கூடுதலாக உணவில் சேர்ப்பதாலும் அசைவ உணவை குறைவாக சேர்ப்பதாலும் தினமும் 1 1/2 லீற்றர் அளவிற்குக் காய்ச்சி வடிகட்டிய நீரை அருந்தி வருவதாலும் அதிக உஷ்ணமுள்ள பண்டங்களைத் தவிர்ப்பதாலும் இரவு அதிகநேரம் கண்விழிக்காமல் இருந்தாலும் மலச்சிக்கல் வருவதைத் தடுக்கலாம். உணவில் கழிவு தினமும் வெளியேறினால் எந்தத் தொல்லைகளும் இல்லை. மலச்சிக்கலினால் உடலில் பல நோய்கள் தோன்றும்.

**மலச்சிக்கல் நீங்க சிகிச்சை முறைகள்**

➤ அதிகாலையில் சாதம் வைத்திருந்த நீராகாரம் ஒரு டம்ளரில் (200 மில்லி) ஒரு தேக்கரண்டி ஆமணக்கெண்ணெய் கலந்து சாப்பிட 1/2 மணிநேரத்தில் மலம்கழியும்.


➤ மலச்சிக்கல் தீர 100 கிராம் உலர்ந்த வல்லாரை இலைகளைப் பொடித்து அரித்து 20 கிராம் அதிமதுரத்தூளுடன் பொடித்து கலந்து இரண்டையும் ஒன்றாகச்சேர்த்து மீண்டும் அரித்து வைத்துக்கொண்டு இரவு படுக்கப்போகுமுன்பு ஒரு தேக்கரண்டி தூளுடன் சர்க்கரை 1/2 தேக்கரண்டி சேர்த்துண்ண காலையில் மலம் கழியும்.

➤ காக்கணவன் வேரைச் சேகரித்து துண்டுகளாக நறுக்கி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 1-2 கிராம் அளவு வெந்நீரில் உட்கொண்டாலும் மலம் இளகிக் கழியும்.

➤ கற்றாழையின் சோற்றை ஆமணக்கெண்ணெயில் போட்டுக்காய்ச்சி வைத்துக் கொண்டு இரவு படுக்கப்போகுமுன்பு ஒரு தேக்கரண்டி எடுத்து குடிக்க மலச்சிக்கல் நீங்கி உடல் குளிர்ச்சியடையும்.

➤ கடுக்கா[illegible] வெளித்தோலை வெந்நீரில் ஊறப்போட்டு அருந்த மலம் நன்கு கழியும்.

➤ ஒரு சட்டியில் 6 டம்ளர் வடிகட்டிய தண்ணீரை ஊற்றி 2 டம்ளராக சுண்டக் காய்ச்சி ஆறியபின் இரவு மீந்து போன சாதத்தில் ஊற்றி அதிகாலை அந்தத் தண்ணீரை இறுத்து சிறிது உப்பு கலக்கிப் பருக 1/2




மணிநேரத்தில் மலம் கழியும்.

➤ நான்கு, ஐந்து பேரீச்சம்பழ சதைப் பற்றுகளை மாலையில் ஒரு டம்ளர் காய்ச்சிய பாலில் ஊறவைத்து மறுநாள் அதிகாலை பாலையும், பழச்சதைகளையும் சாப்பிட மலம் கழியும்.

➤ [illegible] காய்கள் 20 ஐப் பறித்து ஒரு டம்ளரில் சிறிது உப்புப் போட்டு தண்ணீரில் இரவு முழுவதும் ஊறவைத்து மறுநாள் எடுத்து வெயிலில் உலர்த்தி மலச்சிக்கல் ஏற்படும்போது முதல்நாள் இரவு 5 வற்றலை நெய்யில் வறுத்துண்ண காலையில் மலம் இலகுவாகக் கழியும்.

➤ வண்டுகொல்லி இலைகளைச் சேகரித்து சிறுசிறு துண்டாக நறுக்கி வெண்ணெயில் வதக்கி ஒரு மேசைக்கரண்டி அளவு சாப்பிட மலச்சிக்கல் நீங்கி மலம் கழியும்.

➤ சரக்கொன்றைப் புளியை நீர் ததும்ப விட்டு 6 மணிநேரம் ஊறவைத்து 30 மில்லி அருந்த மலம் நன்கு கழியும்.

**திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)**
**சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை**
**யாழ். பல்கலைக்கழகம் கைதடி**

➤ சிவதை வேர்ப்பட்டை சேகரித்து (பாலில் அரித்து) வேர்ப்பட்டையை உருவியெடுக்க வேண்டும்) பொடித்து, அரித்து ஒரு கிராம் எடுத்து வெந்நீருடன் அருந்த மலம் கழியும்.

➤ நிலாவரை இலைகளைச் சேகரித்து நிழலில் உலர்த்தி, பொடித்து, அரித்து 2 கிராம் வெந்நீரில் அருந்த மலச்சிக்கல் நீங்கும்.

➤ பப்பாளிப் பழத்துண்டுகள் தினமும் உண்டுவந்தாலும் மலம் நன்கு கழியும்.

➤ கருணைக்கிழங்கை கறியாகச்சமைத்துண்ணவும் மலம் கழியும்.

மலச்சிக்கல் தீர அறைக்கீரை, கரிசலாங்கண்ணி, அத்திக்காய்,வாழைப்பழம், வில்வம் பழம், அகத்திக்கீரை, வெந்தயக்கீரை, கீரைத்தண்டு, கலலைக்கீரை, முளைக்கீரை ஆகியவற்றை உணவில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்சத்திரக் கண்டங்களும் பரிகாரங்களும்

கிரகங்கள் ஒன்பதும் தெய்வாம்சம் பொருந்தியவை ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒவ்வொரு அதிதேவதையுண்டு. எந்தக் கிரகமும் மனிதனைக் கெடுத்து விட வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்படுவதில்லை. வான மண்டலத்தில் அவை நிரந்தரமாகத் தம்முடைய வீதிகளில் ஊர்ந்து கொண்டே வரும்.

மனிதன் பிறக்கும் நேரம் சில நன்மையாகவும் சில தீமையாகவும் அமைந்து விடுகின்றது. கிரகங்கள் நல்ல முறையில் சஞ்சாரம் செய்கின்ற போது அதாவது பிறக்கும் லக்னத்துக்கு சுபாதிபத்யம் பெற்றும் சுபவர்க்கம் பெற்றும் கேந்திர கோணங்களில் சஞ்சாரம் செய்து கொண்டு வரும்படி அந்த லக்னம் அமைந்தால் அந்த ஜாதகனுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாமல் ஆயுள் பெருகி சகல சம்பத்தும் பெற்று வாழ்ந்து வருகிறான்.

பிறக்கும் நேரத்திற்கு உதயமாகும் லக்னம் கிரக சஞ்சாரங்களுக்கு சரியாக அமையவில்லை என்றால் பலவித இன்னல்களை மனிதன் அனுபவிக்க வேண்டி வருகிறது. வறுமை, பஞ்சம், பிணி , கடன் முதலியவற்றால் மனிதன் வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட வேண்டியுள்ளது. எனவே நாம் பிறக்கும் நேரம் தான் நமது விதியை நிர்ணயிக்கிறதே தவிர கிரகங்கள் அல்ல.

ஒருநாளில் பன்னிரட்டு லக்னமும் சுழன்று வரும்போது எந்த லக்னத்திலாவது மனிதன் பிறக்கலாம். எனவே லக்னத்தால் தான் நன்மை தீமைகளை ஜோதிடர்களால் கணிக்க முடிகிறது. தோஷமான லக்னத்தில் ஒரு குழந்தை பிறந்தால் அதற்கென்று சில சாந்தி முறைகள் உண்டு. உண்மையில் தோஷமான லக்னம் என்று ஏதும் இல்லை ஆயினும் பிறக்கும் நேரத்தை தான் நாம் அப்படிக் கூறினோம்.

இதைத் தவிர தோஷமான நட்சத்திரங்களில் பிறந்த குழந்தை தன்னை விட்டு தன் சுற்றத்தார்களையும் பாதிக்கச் செய்கிறது. உதாரணமாக மூலம் 1,2,3 ஆம் பாதங்கள் , ஆயிலியம் 2,3,4ஆம் பாதங்கள் , கேட்டை 2,3,4ஆம் பாதங்கள் , விசாகம் 4 ஆம் பாதம், ரோகிணி முதலிய நட்சத்திரங்களில் ஜனித்தவர்கள் முறையே (பெண் நட்சத்திரமானால்) மாம னார் , தமையன் , கொளுந்தன் , மைத்து னன் முதலியோருக்கு தீங்கை ஏற்படுத்து கின்றனர். கிருத்திகை, ரோகிணி ஆகிய நட்சத்திரங்களில் ஜெனனமான ஆண், பெண் இருபாலர்களின் தாய், தந்தைக்கு தீங்கோ அல்லது சமமான உபாதையோ கொடுக்கின்றது.

மகம் தீக்காயுள் நட்சத்திரமானாலும் சகல வகையிலும் கஷ்டத்தையே கொடுக்கிறது. ஜெனன காலத்தில் ஏதாவது ஒரு நட்சத்திரத்தில் பிறந்து நான்கு பாதங்களிலும் முறையே அதிபதிகளாகின்ற கிரகங்களின் திசை நடக்குமானால் பாபியாகில் அதுவும் கெட்டுவிடுகிறது.

இத்தகைய அதிபதிகளின் காரகத்துவ பலமோ, ஸ்தான பலமோ, ஸ்திதியை அடைந்த பலமோ ஜாதகனுக்கு ஏற்படுமானால் சம்பந்தப்பட்ட தோஷத்தைக் கொடுக்கிறது. இதற்கு உதாரணமாக கிருத்திகை நட்சத்திரத்தை எடுத்துக் கொள்வோம்.


© Drdha Monge

முதலாம் பாதம் குரு அச்சமும் 2,3ஆம் பாதங்கள் சனி அச்சமும் 4 ஆம் பாதம் குரு அச்சமுமாகின்றது. இந்த நட்சத்திரம் பிதுர் காரகனாக சூரியனுடைய நட்சத்திரமாகும். இந்த நட்சத்திரத்தின் 2,3ஆம் பாதங்களுக்கு அம்சாதிபதி சனி பகவானாக வருகிறார். பிதுர்க்காரகனான சூரியனுக்குச் சனி பகவானானதால் இந்தப்பாதங்களில் பிறந்தால் தந்தையின் சுகம் கெடுகிறது என்பது சாஸ்திர சம்பந்தம்.

அதேபோல கிருத்திகை முதல் பாதமானால் ஆயுள் ஸ்தானமான எட்டாமிடத்திற்கு அதிபதியான குருவினுடைய அம்சமாக வருகிறது. நான்காம் பாதமானாலும் குருவினுடைய அம்சமாக அமைகிறது. எனவே, குருவிற்கும் சனிக்கும் சரியான உறவுமுறை அமையாததால் ஜாதகனுக்கு ஆயுள்பலம் குறையக்கூடும். ஆனால், லக்னாதிபதி வலுத்திருந்தாலும், கேந்திர கோணங்களில் சுபக்கிரகங்கள் அமர்ந்திருந்தாலும் ஜாதகனுக்கு ஆயுள் நீண்டுவிடும்.

இதுபோன்ற நட்சத்திரங்களில் நான்காம் பாத அம்ஸாதிபதி சத்ரு மித்ருத்வம், காரகத்துவம், சந்திரன் நின்ற இராசிக்கு இவர்களின் மூலம் ஏற்படுகின்ற சுபல்ப தோஷங்கள் யாவும் கோமுகப் பிரசவ சாந்தியால் செய்யப்படும் பரிகாரங்கள் சம்பந்தப்பட்ட தோஷங்களையும் அனுசரித்துச் சேர்த்துச் செய்வார்களேயானால், பிறந்த குழந்தைக்குத் தோஷம் நீங்கி உறவினர்க்கும் நன்மை அளிக்கும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

**கோமுக பிரசவ சாந்தி என்றால் எப்படி என்று பார்ப்போம்.**

குழந்தை பிறந்த பதினோராவது நாள் குழந்தையையும், தாயையும் சுத்தியாக்கி, வீட்டுக்கு அழைத்து நாமகரணம் செய்யும் தினத்தில் முதலில் இந்தச் சாந்தியைச் செய்ய வேண்டும். அதாவது, எத்தகைய தோஷம் ஏற்பட்டாலும் பசு மாட்டைக் கன்றுடன் கொண்டு வந்து அவற்றை நல்லபடி அலங்காரம் செய்து, பசுவை வலம் வந்துபுரோகிதரின் உதவியால் மந்திரங்கள் சொல்லி சிவப்புப் பட்டு வஸ்திரத்தில் குழந்தை [illegible] விட்டு, முறத் தட்டில் இருத்தி குழந்தையின் தந்தையானவர் பசுவின் வால், முறம் தொழுது, பின் முறத்தில் உள்ள குழந்தையை உச்சி மோர்ந்து குழந்தையை மனைவியிடம் கொடுக்க வேண்டும். தாயானவள் குழந்தையை வைத்துக் கொண்டிருக்க, புரோகிதர் மந்திரத்தால் குழந்தையை ஸ்நானம் செய்வித்து பலவித பரிகாரமான மந்திரங்களைக் கொண்டு சாந்திகளைச் செய்ய வேண்டும். இதற்கு கோமுக பிரசவ சாந்தி முறை என்று பெயர்.

பசுவினுடைய தோஷம் நீங்கிய பிறகு தான் குழந்தை முப்பது முக்கோடி தேவதைகள் தங்கும் காமதேவியினுடைய ஆசியைப் பெற்று, தாய் தந்தையர்கள் குழந்தையைக் காப்பாற்றுவதாகும்.

மேலே குறிப்பிட்ட சாந்தி முறையை குழந்தை பிறந்த 11 ஆம் நாள் செய்ய தாய், தந்தையருக்கு சந்தர்ப்பம் வாய்க்கா விட்டால் மறு நட்சத்திர தினத்தன்று செய்யலாம்.

ஜோதிடக் களம்

மேலும் ஒரு குழந்தை கொடி போட்டுக் கொண்டு பிறந்தாலும் மாலை போட்டுக் கொண்டு பிறந்தாலும் சாந்தி செய்து கொள்ள வேண்டும். தாய், தந்தை, சகோதரன், சகோதரி நட்சத்திரத்தில் பிறந்தாலும் ஏக நட்சத்திர தோஷம் என்று சிலர் சொல்லுவார்கள். இதற்கும் சாந்தி முறை உண்டு. எந்த சாந்தி புரோகிதரால் செய்யப்பட்டாலும் முதலில் கோமுக பிரசவ சாந்தி செய்த பின்னரே செய்ய வேண்டும்.

குழந்தை பிறந்த ஓராண்டுக்குள்ளாக பிறந்த நட்சத்திரத்தில் எப்போதும் செய்யலாம் என்று மகரிஷிகள் கருதுகிறார்கள். இந்த தோஷப் பரிகார விடயங்கள் யாவும் மயூகம், கௌஸ்தூபம் ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளன. சாந்தி முறைகளை எடுத்துச் சொல்லும் நூல் சிந்து எனப்படும்.

இனி, திதிகளைக் கவனிக்குமிடத்து கிருஷ்ண பட்ச சதுர்த்தி நாளில் ஜெனனமானால் விசேட பலன்கள் ஏற்படுமென்று தெரிகிறது. கிருஷ்ண பட்ச சதுர்த்தி நாளை ஆறு பாகமாகப் பிரித்துப் பார்க்க வேண்டும். முதல் பாகத்தில் குழந்தை பிறந்தால் மிகவும் சுப அம்சம் பெற்றதாகக் கருத வேண்டும்.இரண்டாம் பாகம் தகப்பனுக்கு நல்லதல்ல. மூன்றாம்பாகம்தாய்க்குநல்லதல்ல. நான்காம் பாகம் சகோதரர்களுக்கு நல்லதல்ல.

ஐந்தாம் பாகம் குலத்திற்கு நல்லதல்ல. ஆறாம் பாகம் தனதானிய ஹானி என்று சுருதிகள் கூறுகின்றன. முதல் பாகத்தைத் தவிர இரண்டு முதல் ஆறாவது பாகம் வரையில் பிறந்த குழந்தைக்குக் கோமுக பிரசவ சாந்தியுடன்,சதூர்த்தசி சாந்தியும் செய்ய வேண்டும்.

# குற்ற விசாரணைகளின் போது அரசியல் தலையீடுகளை கருத்திலெடுக்க வேண்டாம்

## பொலிஸாருக்கு கோத்தா அறிவுரை

(கொழும்பு)

குற்ற விசாரணைகளின் போது அரசியல் தலையீடுகளை கவனத்திற்கொள்ள வேண்டாம் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாலியல் வன்முறை மற்றும் ஏனைய குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களை எந்தவிதமான அழுத்தங்களுக்கும் அடிபணியாது கைதுசெய்ய வேண்டுமென பொலிஸார் மற்றும் படையினருக்கு ஏற்கனவே இது தொடர்பில் உத்தரவிடப்பட்டுள்ளது.

விசாரணைகளின் போது அரசியல்வாதிகள் தலையீடு செய்யக்கூடாது. அரசியல் தலையீடுகளுக்கு அடிபணியும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கே முதலில் தண்டனை விதிக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# முச்சக்கரவண்டிச்சாரதியின் பொறுப்பு வாய்ந்த நற்செயல்

வவுனியா பிரதேசத்தில் முச்சக்கரவண்டியொன்றில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தினை குறித்த முச்சக்கரவண்டி சாரதி முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் ஊடாக வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

வவுனியா பேருந்து தரிப்பிடத்தில் இருந்து நேற்று முன்தினம் இரவு சேவையை நிறைவு செய்து வீட்டிற்கு சென்ற முச்சக்கரவண்டி சாரதி வி.கிருஷ்ணமூர்த்தி தனது முச்சக்கரவண்டியை துப்புரவு செய்யும் போது இருக்கைக்கு கீழே இருந்து பண பொதியொன்றினை கண்டெடுத்துள்ளார்.

இதனை அடுத்து உடனடியாக முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சி.இரவீந்திரனுக்கு தகவலை வழங்கி விட்டு மறுநாள் காலை அப்பணத்தினை முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினூடாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எரிக் பெரேராவிடம் கையளித்துள்ளார்.இப்பணத்தினை ஒப்படைத்தமைக்காக முச்சக்கரவண்டி சாரதியையும் அதன் சங்கத்தினையும் பாராட்டிய வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முச்சக்கரவண்டி சாரதியின் பொறுப்புவாய்ப்பு செயலை ஏனையோரும் கற்றுக் கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார். (அ-2-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் இனக்கலவரம் 115 பேர் சுட்டுக்கொலை

நைஜீரியாவில் கடந்த 2 நாட்கள் நடந்த கலவரத்தில் 2 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சுமார் 115 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

நைஜீரியாவில் பிளேச்சு மாநிலத்தில் பாரம்பரிய கிறிஸ்தவ பழங்குடியினருக்கும் இடம்பெயர்ந்து வந்த புலானி பழங்குடியினருக்கும் இடையே கடந்த சில மாதங்களாக மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த சனிக்கிழமை கிறிஸ்தவ பழங்குடியின கிராமங்களுக்குள் புகுந்து புலானி இனத்தினர் தாக்குதல் நடத்தினர். இதில் 63 பேர் பலியானார்கள். அவர்களின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அதில் ஆளும் கட்சி செனட் எம்.பி. கியாங் டான் டோங், மாநில எம்.எல்.ஏ. ஒருவர் உட்பட ஏராளாமானோர் கலந்து கொண்டனர்.

இறுதிச் சடங்கில் துப்பாக்கிகளுடன் புகுந்த பெரும்பான்மை முஸ்லிம்கள் இயக்கத்தினர் நடத்திய தாக்குதலில் 2 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து கடந்த 2 நாட்களாக நடந்த கலவரத்தில் சுமார் 115 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து பிலாடியு பகுதியில் ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டுள்ளது.

நைஜீரியாவின் வடக்குப் பகுதியில் கிறிஸ்தவர்களும் தெற்குப்பகுதியில் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். அங்கு முஸ்லிம் மதத்தின் சட்டங்களை நாட்டில் அமுல்படுத்த வேண்டும் என்று அடிக்கடி சண்டை நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த தாக்குதலை கண்டித்து ஜோஸ் நகர்- அபுஜா செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் வாலிபர்கள் மறியலில் ஈடுபட்டனர். மேலும் அசம்பாவிதம் நடப்பதை தடுக்க பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் நைஜீரியாவில் இன மோதல் உச்ச கட்டத்தை அடைந்துள்ளது. (அ-2)

# முதற்தடவையாக ஆங் சாங் சூகி பாராளுமன்ற கூட்டத்தில் பங்கேற்பு



(யாங்கூன்)

மியன்மாரில் ஜனநாயகத்துக்காக போராடி வரும் எதிர்க்கட்சி தலைவி ஆங்சாங் சூகி பல ஆண்டு கால வீட்டுச் சிறைவாசத்துக்கு பின்னர் விடுதலையான அவர் சமீபத்தில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி ஏற்க பாராளுமன்றத்துக்கு சென்ற அவர் அதன் பின்னர் அங்கு செல்லவில்லை. ஐரோப்பிய நாடுகளுக்கு அவர் சுற்றுப் பயணம் சென்றதால் அவரால் பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் நிகழ்வு ஒத்தி வைக்கும் நிலை உருவானது.

இந்நிலையில் நேற்று முன்தினம் முதல் முறையாக அவர் பாராளுமன்ற கூட்டத்தில் கலந்து கொண்டார். தன்னால் முடிந்த அளவுக்கு நாட்டுக்கு சேவை செய்வதாக அவர் உறுதி கூறினார். மியன்மாரில் புதிய அரசியல் மறுசீரமைப்புக்களை ஏற்படுத்துவதில் ஆங்சான் சூகியின் பாராளுமன்றப் பிரவேசம் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். (அ-2)

# முதலாவது சுதந்திர தினத்தை கொண்டாடியது தெற்கு சூடான்

தெற்கு சூடான் நாடு தனது முதல் சுதந்திரத்தினை கொண்டாடியது. இதனால் நாடு முழுவதும் மக்கள் உற்சாகத்தில் காணப்பட்டனர். ஆபிரிக்க நாடான சூடான் நாடு கடந்த 2011 ஆம்ஆண்டு 9 ஆம் திகதி அன்று சூடான் தெற்கு சூடான் என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. கடந்த 2005 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி இதற்கு ஐ.நா. அங்கீகாரம் வழங்கியது.

இதனால் ஐ.நா. உறுப்பு நாடுகளில் தெற்கு சூடான் இணைந்தது. இதன் ஜனாதிபதியாக சல்வாகிர் உள்ளார். எண்ணெய் வளம் மிக்க தெற்கு சூடான் இன்னமும் எல்லைப்பிரச்சி னையால் சூடானுடன் போரிட்டு வருகிறது. இதற்குக் காரணம் எண்ணெய் வயல்கள் உள்ள பகுதி சூடான் வசம் இருப்பதே எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் தெற்கு சூடான் நேற்று முன் தினம் நள்ளிரவு தனது முதல் சுதந்திர தினத்தை கோலாகலமாகக் கொண்டாடியது. நகரமெங்கும் மக்கள், இளைஞர்கள் உற்சாக வெள்ளத்தில் பேரணியாக சென்றனர். ஜனாதிபதி சல்வாகிர் கூறுகையில், 2015 ஆம் ஆண்டில் தெற்கு சூடான் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறும். அதனை நிறைவேற்றுவதை இலக்காக கொண்டுள்ளோம் என்றார். (அ-2)

# சீனாவில் நிலச்சரிவு; பதின்நான்கு பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் தொடர்ந்து வரும் பலத்த மழை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதில் சிச்சுவான் மாகாணம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இம்மாகாணத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழந்தனர். 26 பேரைக் காணவில்லை என்று மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஜின்ஷா ஆற்றிலிருந்து 12 சடலங்களை மீட்ட மீட்புக் குழுவினர், சகதியில் சிக்கியிருந்த மேலும் 2 பேரது சடலங்களை மீட்டனர்.

இப்பகுதியில் மேற்கொள்ளப்படும் நீர்மின் திட்டப்பணிக்கான கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த பல தொழிலாளர்கள் நிலச்சரிவில் சிக்கியுள்ளனர். (அ-2)


# நாராயணசாமியின் உருவ பொம்மை எரிப்பு



(சேலம்)

சேலத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே அகில இந்திய இளைஞர்கள் பெருமன்றத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மத்திய அமைச்சர் நாராயணசாமியின் உருவப் பொம்மையை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை இராணுவத்தினர் தமிழ் நாட்டில் பயிற்சி அளிக்கக்கூடாது என்று மட்டுமே தமிழர்கள் கூற முடியும். இந்தியாவில் வேறு எங்கு வேண்டுமானாலும் இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி அளிக்கலாம். அந்த முடிவை பாதுகாப்பு அமைச்சகம் தான் எடுக்க வேண்டும் என்று கூறிய நாராயணசாமியின் உருவப் பொம்மையை எரித்தும் இந்தியாவில் வேறு எங்கும் அவர்களுக்கு பயிற்சி அளிக்கக் கூடாது என்று வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 21 பேரை பொலிசார் கைது செய்துள்ளனர். (அ-2)



ரஷ்யாவின் பிரதமர் டிமிட்ரி மெத்வதேவ் மற்றும் அமைச்சர்கள் தலைநகர் மொஸ்கோவில் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

# விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரிப்பவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

## *மாநில அரசுக்கு மத்திய அரசு உத்தரவு*

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாநில அரசுக்கு மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுக்கு தடைவிதித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவு குறித்த விபரங்களை அனைத்து மாவட்ட கலெக்டர், தமிழக டி.ஜி.பி. மற்றும் சேலம், சென்னை, கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி டி.ஐ.ஜிக்கள், க்யூ பிரிவு, குற்றப்புலனாய்வு, நுண்ணறிவு பிரிவு பொலிஸாருக்கு மத்திய உள் விவகாரத்துறை அமைச்சக இணைச் செயலர் தர்மேந்திர சர்மா அனுப்பியுள்ளார்.

தமிழருக்கு என் தாய்நாட்டை (தமிழ் ஈழம்) உருவாக்கும் நோக்கம் இந்திய நாட்டின் இறையாண்மைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக அமையும் என்பதால் சட்டவிரோத நடவடிக்கை வரம்புக்குள் வருகிறது. தோல்வியடைந்த பின் கூட தனிஈழம் என்ற கொள்கையை கைவிடாமல் ஐரோப்பாவில் நிதி திரட்டியும் பிரசார நடவடிக்கைகள் வழியாகவும் தனிஈழம் அமைப்பதற்காக மறைமுகமாக செயற்பட்டு வருவதாலும் தமிழீழ விடுதலைப் புலி தலைவர்கள் அல்லது போராளிகள் சிதறிக் கிடக்கிற தீவிரவாதிகளை ஒன்று சேர்ப்பதற்கு மீண்டும் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

பிரிவினைவாத தமிழ் பற்றார்வக் குழுவினரும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவாளர்களும் மக்களிடையே பிரிவினைவாத போக்கினை தொடர்ந்து வளர்த்து வருவதுடன் தமிழகத்தில் தமிழீழ விடுதலைப்புலியினருக்கு ஆதரவான அடித்தளம் அமைத்து வருவதால் இந்திய ஒருமைப்பாடு சிதையும் சூழல் உள்ளது.

அதனால் பொது அமைதிக்கு தொடர் அச்சுறுத்தல் குந்தகம் விளைவிப்பதாக கருதி சட்டவிரோதமான அமைப்பாக மத்திய அரசு அறிவித்துள்ளது. மேலும் வன்முறை மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் இந்திய மக்களின் பாதுகாப்புக்கு தொடர் அச்சுறுத்தலாக இருக்கிறது.

எனவே 1967 ஆம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்களை கொண்டு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பை சட்ட விரோத அமைப்பாக அறிவித்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டதும் உடனடியாக செயலுக்கு வரும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு தடை விவகாரம்
# பொலிஸாரிடம் விளக்கம் கோருகிறது நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பினை தடை செய்யுமாறு எந்த அடிப்படையில் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது என யாழ். பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் சமன் சிகேராவிடம் யாழ். நீதிமன்று விளக்கம் கோரியுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பை யாழ். நீதிமன்று தடைசெய்ததை நீக்கக்கோரி யாழ். மருத்துவ சங்கம் விண்ணப்பம் செய்திருந்தது.

குறித்த வழக்கு நேற்று யாழ். நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது மருத்துவர் சங்கத்தின் சார்பில் சட்டத்தரணிகளான கே.சுகாஷ், கு.குருபரன், மணிவண்ணன் ஆகியோரின் அனுசரணையில் ஆஜராகி இருந்த சிரேஷ்ட சட்டத்தரணி வி.புவிதரன் தமது சமர்ப்பணத்தில் குறிப்பிடுகையில்; இவ் ஆர்ப்பாட்டமானது அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 14(1)ab ஆகியவற்றின் கீழ் அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கும் பேச்சு வெளிப்பாட்டிற்குமான சுதந்திரங்களினைப் பற்றி அவ்வுறுப்புரைகள் உறுதி செய்தன.

இங்கு வைத்தியர்களால் செய்யப்படவிருந்த நடவடிக்கையானது மட்டுப்படுத்தப்பட்ட ஓர் தொழிற்சங்க நடவடிக்கையாகும். இதை தடைசெய்வதற்கு சட்டத்தில் இடமில்லை. இப் பகிஷ்கரிப்பு வெளிநோயாளர் பிரிவுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இவ் ஆர்ப்பாட்டம் நோயாளர்களை வைத்தியசாலைக்குள் அனுமதிப்பதற்கோ அல்லது உள்நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கோ வேறு எந்த வைத்திய நடவடிக்கைகளை பகிஷ்கரிப்பதற்கா கவோ அமைந்திருக்கவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தார்.

வைத்தியர்கள் போர்க்காலங்களில் தமது உச்ச சேவையினை வழங்கியிருந்தனர் எனவும் இவ்வழக்கில் வைத்தியகலாநிதி எம். ஜெயக்குமார் மீதான தாக்குதலினைக் கண்டித்தும் அவற்றுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதனைக் கண்டித்துமே பகிஷ்கரிப்பில் வைத்தியர்கள் ஈடுபடவுள்ளனர்.

எனவே, இத்தடை உத்தரவினை நீக்க வேண்டும் எனக் கோரினார்.

இந்நிலையில் வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் இவ்வழக்கு வைத்திய கலாநிதி எம்.ஜெயக்குமார் வீட்டின் மீதான தாக்குதலினைக் கண்டித்து தொடரப்பட்டு உள்ளதால் தனிநபர் மீதான தாக்குதல் குறித்து பொலிஸாருக்கு சட்ட பூர்வமான முறைப்பாட்டினைக் கொடுத்து அதன் அடிப்படையில் குற்றவாளிகளைக் கைது செய்து மன்றின் முன் நிறுத்துவதற்கு சட்டத்தில் இடமுண்டு.

இத்தாக்குதல் குறித்து முறையான விசாரணை நடத்த வேண்டியது பொலிஸாரின் கடமை என்பதனையும் மன்று ஏற்றுக் கொள்கின்றது.

எவ்வாறாயினும் தனிநபர் மீதான தாக்குதல் தொடர்பில் சட்டமுறையான நடவடிக்கையை சுகாதார அமைச்சு மற்றும் பொலிஸ்மா அதிபர் மூலமாகவும் எடுப்பதுதான் உசிதமாக இருக்கும்.

அதை விடுத்து இவ்வாறான பணிப்பகிஷ்கரிப்பு மூலம் ஏற்கனவே அவலங்களுக்குள் தள்ளப்பட்டுள்ள பொதுமக்களை மீண்டும் அவல நிலைக்கு கொண்டு செல்லும் கைங்காரியத்தில் கடவுளுக்கு அடுத்தபடியாக வைத்து மதிக்கப்படுகின்ற வைத்தியர்கள் செய்யும் காரியமாக இருக்க முடியாது.

எவ்வாறாயினும் 05.07.2012 அன்று யாழ். குற்றத்தடுப்பு பொலிசாரினால் இணைக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலும் பொலிஸ் பரிசோதகரின் சமர்ப்பணங்களின் அடிப்படையிலும் மன்று இத்தடைக்கட்டளையை வழங்கி இருந்தது.

ஆகவே இது தொடர்பில் விளக்கமளிப்பதற்கு மன்று பொலிஸ் பரிசோதகருக்கு கட்டளை இடுகின்றது. மேலும் இவ்வழக்கை எதிர்வரும் 19 ஆம் திகதியன்று கூப்பிடுமாறும் மன்று கட்டளையிட்டுள்ளது. (அ-4)

# தமிழ்க்கட்சிகளுடனான அரசாங்கத்தின் இணக்கப்பாட்டுக்கு ஐ.தே.க. ஆதரவு வழங்கும்

## லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி.தெரிவிப்பு

இலங்கையின் இராஜதந்திர நட்புறவின் அடித்தளமே இந்தியாவாகும். எனவே, இந்நாட்டுடன் நட்புறவைப்பேண முடியாத அரசாங்கம் எவ்வாறு ஏனைய நாடுகளுடன் நட்புறவைப்பேணப் போகின்றது என ஐ.தே.க. கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல கேள்வியெழுப்பியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் தமிழ்க்கட்சிகளுடன் ஏற்படுத்திக் கொள்ளும் இணக்கப்பாட்டிற்கு ஐ.தே.க. பூரண ஆதரவை வழங்கும். இலங்கையின் இராஜதந்திரம் இந்தியாவுடனான நட்புறவுடனேயே பின்னிப் பிணைந்து இருப்பதோடு இருநாட்டு நட்புறவுக்கும் அடித்தளமாகவும் அமைந்துள்ளது.

ஒவ்வொரு ஆட்சியாளர்களும் இதனையே கடைப்பிடித்து வந்துள்ளனர். ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இந்தியாவுடன் நட்புறவைப் பேணுவதில் தோல்வி கண்டுள்ளது.

இவ்வாறானதோர் நிலையில் எப்படி ஏனைய உலக நாடுகளுடன் இந்த அரசாங்கத்தால் நட்புறவைப் பேண முடியும். ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டுடனும் சிறந்த நட்புறவு காணப்பட்டது. எனவேதான் எமது நாட்டுக்கு எதிரான நடவடிக்கைகள் அங்கு தடைசெய்யப்பட்டன.

இதனை அரசாங்கம் புரிந்துகொண்டு அரசியல் காய் நகர்த்தல்களை முன்னெடுக்க வேண்டும்.

அரசியல் தீர்வு இந்தியா உட்பட சர்வதேச நாடுகளிலும் உள்நாட்டிலும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்க வேண்டுமென்ற அழுத்தம் அதிகரித்துள்ளது. ஆனால், அரசாங்கம் அது தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தலைமையிலான தமிழ் அரசியல் கட்சிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு பேச்சுக்களை நடத்தி காணப்படும் இணக்கப்பாட்டுடனான தீர்வுக்கு ஐ.தே.க.பூரண ஆதரவை வழங்கும் என்றார். (அ-2)

# கருகிய நிலையில் சடலங்கள் மீட்பு

## கிண்ணியாவில் பரபரப்பு

(கிண்ணியா)

கிண்ணியா பொலிஸ் பிரிவின் ஆழங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து கருகிய நிலையில் இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

தாயும் மகளுமே இவ்வாறு தீயில் கருகி உயிரிழந்துள்ளதாக திருகோணமலை பிரதேசத்திற்குப் பொறுப்பான உயர்பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்கள் கொலை செய்யப்பட்டார்களா என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை குறித்த வீட்டுக்குச் சென்ற ஒருவர் சடலங்கள் தொடர்பான தகவலை வழங்கியதாகவும் பொலிஸார் தெரிவித்துள் ளனர். (அ-2)

# இந்திய கலைஞர்களினால் இசை, நடன பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், இந்திய துணைத்தூதரகம் யாழ்ப்பாணமும் இணைந்து நடத்தும் இசை நடனப் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 16,17,18, ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தியாவில் தத்தம் துறைகளில் முத்திரை பதித்த கலைஞர்களான பரத நாட்டிய கலைஞர் அலமேலு வல்லி, கர்நாடக இசைப் பாடகர்களான ஸ்ரீமத் ரி.எம். கிருஸ்ணா, உன்னிகிருஸ்ணன் ஆகிய கலைஞர்கள் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இவர்களில் துறைசார் அரங்கப்பயன்பாடு, ஆற்றுகை நுணுக்கங்கள் மற்றும் நுட்பங்கள் தொடர்பான பயிற்சிப்பட்டறைகள் நடைபெறவுள்ளன.

துறைசார் ஆர்வமுள்ள பாடசாலை மாணவர்கள் தவிர்ந்த இசை நடன கலைஞர்கள், இசையைப் பயின்று கொண்டிருப்பவர்களுக்கும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் மிக்க பயனுடையதாகும். பங்குபற்ற விரும்புவோர், 021 3202990 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது நேரிலோ திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வடமாகாண பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் என். ஸ்ரீதேவி கேட்டுள்ளார். (ஞ)

NDB Savings Star Plus
சேமிப்பு கணக்குகளுக்கும்
10%*
அதி உயர் வட்டியைத் தருவது NDB
அழையுங்கள் 011 2 448 888
AA-(lka) Fitch Rating
NDB வங்கி
(அ/504)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் கருக்கி மோர் பெருக்கி நெய் உருக்கி உண் போரின் தம் பேருரைக்கப் போகுமே பிணி.

-தமிழ் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பால் உற்பத்தியாளர்களிடம் ஒரு பகிரங்கக் கோரிக்கை

நிறை உணவான பசுப்பால் மக்களின் போசாக்கில் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

வீட்டிற்கு ஒரு பசுவையேனும் வளர்ப்போம் என்ற மகுட வாசகம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால்,எங்கள் குழந்தைகளின்-பிள்ளைகளின் போசாக்கு மட்டம் ஆரோக்கியமானதாக இருந்திருக்கும்.

என்ன செய்வது! பசு வளர்ப்பதில் எங்களிடம் இருக்கக்கூடிய பஞ்சித்தனம் எங்கள் பிள்ளைகளின் போசாக்கிலும், ஆரோக்கியத்திலும் பாதகமான விளைவை ஏற்படுத்தியுள்ளது.

இருந்தும் எங்கள் யாழ்.குடாநாட்டில் இருக்கக்கூடிய பால் உற்பத்தியாளர்களின் முயற்சி காரணமாக எங்களுக்குத் தேவையான பசுப்பாலை ஓரளவிற்கேனும் பெற முடிகின்றது என்ற திருப்தி நிலையில் இப்போது அதற்கும் ஆபத்து வந்துவிட்டது என்பதை நினைக்கும்போது வேதனை தாளமுடியவில்லை.

குடாநாட்டில் உற்பத்தியாகும் பசுப்பால், குடாநாட்டு மக்களின் தேவைக்குப் போதுமானதல்ல என்ற நிலைமை இருக்கும்போது, தென் பகுதிகளில் இயங்கக்கூடிய ஒரு சில நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் பாலைக் கொள்வனவு செய்து அதனைத் தென்பகுதிக்கு எடுத்துச் செல்கின்றன.

யாழ்ப்பாணத்தில் பால் கொள்வனவில் ஈடுபடுகின்ற யாழ்கோ மற்றும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் போன்ற அமைப்புகள் பாலைக் கொள்வனவு செய்து அவற்றை யாழ்ப்பாணத்தில் நுகர்வோருக்கு வழங்கும் போது, தென்பகுதியில் இயங்கும் ஒரு சில நிறுவனங்கள் ஒரு சில ரூபாய்களால் ஆசைகாட்டி யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் பசுப்பாலைக் கொள்வனவு செய்து அதனை தென்பகுதிக்குக் கொண்டு செல்வது முழுமையாகத் தடுக்கப்பட வேண்டும்.

அதேநேரம் குடாநாட்டுப் பால் உற்பத்தியாளர்கள் தமக்கான தார்மீகப் பொறுப்பை உணர்ந்து, எங்கள் மண்ணில் உற்பத்தி செய்யப்பட்ட பாலை எங்கள் பிள்ளைகள் நுகர்வதற்கேற்றவாறு அவற்றை விற்பனை செய்வது கட்டாயமானதாகும்.

ஏ-9 பாதை பூட்டப்பட்டிருந்தபோது, யுத்த காலம் நிலவியபோதெல்லாம் எத்தனையோ சிரமங்களின் மத்தியில் யாழ்ப்பாண மண்ணில் இயங்கி உள்ளூர் பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்த எங்கள் மண்ணில் இயங்கும் பால் கொள்வனவு நிலையங்களை மறந்து, சடுதியாக வந்த நிறுவனங்களுக்கு பாலை விற்பனை செய்வதென்பது நியாயமானதல்ல.

அது நியாயமென்றால் அந்த நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் கொள்வனவு செய்த பாலை யாழ்ப்பாணத்திலேயே விற்பனை செய்யவேண்டும்.

மாணவர்களுக்கு பசுப்பால் வழங்கும் அரசின் திட்டம் நடைமுறைக்குவரும் வேளையில் எங்கள் பிள்ளைகள் அந்தத் திட்டத்தின் பயனைப் பெறவேண்டுமாயின் உள்ளூரில் பாலை விற்பனை செய்யக்கூடிய உள்ளூர் நிறுவனங்களுக்கே பால் உற்பத்தியாளர்கள் பாலை வழங்கவேண்டும்.

யாழ்.குடாநாட்டில் பசுப்பாலுக்கான நிரம்பல் போதுமாக இல்லாததால் எங்கள் பிள்ளைகளின் போசாக்கு பாதிக்கப்படுவதாக யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட கல்வியாளர்கள் எச்சரிக்கை செய்திருக்கும் வேளையில், குடாநாட்டு பால் உற்பத்தியாளர்கள் தங்கள் தார்மீகப் பொறுப்பை உணர்ந்து செயற்படுவார்கள் என நம்பலாம்.

# கிளி.தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை 982 மில்லியனில் புனரமைக்கப்படும்

## கிளிநொச்சிக்கு வருகைதந்த ஜப்பான் தூதுவர் தெரிவிப்பு

(சிவநகர்)

ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ள கிளிநொச்சி மாவட்ட தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு கிளிநொச்சி அமைப்பு சபையினை இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதுவர் நொபுகிட்டோ கோபா, திருமதி நொபுகிட்டோ கோபா மற்றும் தூதுவரின் செயலாளர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டதோடு அதிகாரிகளுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சி நீர்வழங்கல் நிலையத்தைப் பார்வையிட்ட தூதுவர் உள்ளிட்ட குழுவினர், இந்த வருட இறுதிக்குள் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்ததோடு அடுத்த வருட இறுதிக்குள் பணிகள் பூர்த்தியாக்கப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டனர்.

கடந்த 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சபைக் கட்டிடமும் அதன் நீர்வழங்கல் நடைமுறைகளும் நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தினால் அழிவடைந்தது. பின்னர் கடந்த 2005 ஆம் ஆண்டு நிக்கொட் நிறுவனத்தினால் புனரமைக்கப்பட்ட போதும் மீண்டும் யுத்தத்தினால் பாதிப்படைந்தது.

இந்தநிலையில் அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைவாக இந்தச் சபையானது 982 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இந்தச் சபையின் புனரமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் நீர் பெறும் இடங்கள் புனரமைத்தல், நீர் சுத்திகரிப்பு இடங்கள் புனரமைப்பு, 2 நீர்த்தாங்கிகள் புதிதாக நிர்மாணித்தல்,நீர்க்குழாய் பெறுதல் போன்ற வேலைத்திட்டங்கள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நீர்வழங்கல் புனரமைப்பு செய்யப்படுவதன்மூலம் கரைதுறைப்பற்று கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இரத்தினபுரம், கணேசபுரம், குமரபுரம்,பரந்தன்,விவேகானந்த நகர், உதய நகர் கிழக்கு, ஆனந்தபுரம், தொண்டமாநகர், கனகாம்பிகைக்குளம், கனகபுரம், திருநகர் தெற்கு, திருநகர் வடக்கு, கிளிநகர், மருதநகர் பகுதியைச்சேர்ந்த சுமார் 30ஆயிரம் மக்கள் பயன் பெறுவார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடலில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் பி.தபேந்திரன்,சபையின்பொறியியலாளர் ஆர்.சுவீந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(அ-6-3-254)

# வைத்தியசாலைக்கான லிப்ற் அமைக்கும் பணி மிற்சுபிசி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும்

## புரியாத புதிர் என்கின்றனர் வைத்தியசாலைப் பணியாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஜப்பானின் நிதியுதவியுடன் ஜெய்கா திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்படும் கட்டடத்திற்கு லிப்ற் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பா ளர் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலை புதிய கட்டிடத்திற்கு லிப்ற் அமைக்கும் பணிக்காக இலங்கை மின்சார சபைக்கு 80 இலட்சம் ரூபாய் பணம் வழங்கப்பட்டது.

இப்பணத்திற்கு என்ன நடந்ததோ தெரியவில்லை. ஒருவருடமாகியும் இது வரை லிப்ற் அமைக்கும் பணிகள் நடைபெறுவதாகத் தென்படவில்லை.

எனினும் யாழ்.போதனாவிற்கு லிப்ற் அமைப்பதற்கான பணிகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன என்றும் அது இம்மாதம் (ஜூலை) நிறைவடையும் என்று வைத்தியசாலை உயர் அதிகாரிகள் சார்பிலும் மின்சாரசபையின் உயர் அதிகாரிகள் சார்பிலும் தெரிவிக்கப்பட்டு வந்தது.

தற்போது ஜூலை மாதமாகையினால் யாழ்.போதனாவிற்கு லிப்ற் வந்து விடுமா எனப் பணிப்பாளரிடம் வினவியபோது அவர் மீண்டுமொரு காலத்தைக் குறிப்பிட்டதுடன் லிப்ற் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்து இதற்கான தாமதத்திற்காக மின்சார சபையினரையும் கடிந்து கொண்டார்.

தற்போது அமைக்கப்பட்டு வரும் பழைய மற்றும் புதிய கட்டிடத்திற்கான லிப்ற் அமைக்கும் பணியில் மிற்சுபிசி நிறுவனம் பொறுப்பேற்றுள்ளதாகவும் அவர்களுடன் லிப்ற் அமைப்பது தொடர்பில் ஆராயப்படவுள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

லிப்ற் அமைப்பதில் அதிகாரிகள் காட்டும் அசமந்தப்போக்கினால் நோயாளர்கள், வைத்தியசாலைப் பணியாளர்கள், தொண்டர்கள், வைத்தியர்கள் எனப் பலரும் மிகவும் சிரமத்தினை எதிர்நோக்கி வருகின்றனர்.

யாழ்.போதனாவில் லிப்ற் அமைக்கும் பணிகள் புரியாத புதிராக உள்ளதாக வைத்தியசாலைப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(அ-4)

# பஷிலை டில்லிக்கு வருமாறு இந்தியா அழைக்கின்றது

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவை புதுடில்லிக்கு வருமாறு இந்தியா அழைப்பு விடுத்துள்ளதாக கொழு ம்பு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான ஜெனீவா தீர்மானத்தை இந்தியா ஆதரித்த பின்னர் புதுடில்லிக்கு ஆத்திரமூட்டும் வகையிலான பல நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டிருந்தது.

இருந்த போதிலும் இலங்கையுடன் தொடர்ந்து இணைந்து செயற்படவே இந்தியா விரும்புகிறது. அண்மையில் இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கொழும்பு வந்திருந்தபோது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை புதுடில்லிக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

சிவ்சங்கர் மேனனின் அழைப்பை பசில் ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டிருந்தார். எனினும் புதுடில்லிக்கான பயணத்தை எப்போதும் மேற்கொள்வது என்று அவர் இன்னமும் முடிவு செய்யவில்லை என்றும் அவ்ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

(அ-2)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி) பதவிக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா அறிவித்துள்ளார்.

யாழ். கல்வி வலய பாடசாலைகளில் பணிபுரியும் ஆரம்பக் கல்வியில் தொழிற் தகைமையுடைய வகுப்பு I மற்றும் வகுப்பு II ஐச் சேர்ந்த ஆசிரியர்கள் ஆசிரிய ஆலோசகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேவை நீடிப்பில் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியாது. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் வலயக் கல்வி அலுவலக நிர்வாக கிளையில் விண்ணப்ப படிவத்தை பெற்று எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## வாழ்க்கை



உலகம் முழுவதும் நம் மனதில்தான் இருக்கிறது. எதையும் சரியான முறையில் பார்க்க பார்க்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

முதலில் இந்த உலகை நம்புங்கள். உலகிலுள்ள ஒவ்வொன்றுக்கும் ஓர் அர்த்தம் உள்ளது என்பதை நம்புங்கள். உலகில் உள்ள ஒவ்வொன்றும் நல்லது, புனிதமானது, அழகானது. தீமையான எதையாவது பார்த்தால் நாம் அதைச்சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று அறியுங்கள்.

சுமையை உங்கள் மீது ஏற்றுக்கொள்ளுங்கள். உலகம் குட்டிச்சுவராகிக் கொண்டிருக்கிறது என்று சொல்லத் தோன்றும் போது நாம் நம்மைப் பரிசீலனை செய்யவேண்டும். உள்ளதை உள்ளபடி பார்க்கும் ஆற்றலை நாம் இழந்து விட்டோம் என்று அப்போது காண்போம்.

இன்பம் வரும்போது அது தனது தலைமீது துன்ப முடியைச் சூடியே வருகிறது. இன்பத்தை வரவேற்பவன் துன்பத்தையும் வரவேற்றே ஆகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் களமிறங்குகிறார் பீற்றசன்





இங்கிலாந்து அணியின் ஒருநாள் சர்வதேசப் போட்டி டுவென்டி டுவென்டி அணியிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்ற இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றசன் தான் மீண்டும் அப்போட்டிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் அதிக போட்டிகள் காரணமாக டெஸ்ட் போட்டிகளில் கவனம் செலுத்துவதற்காகவும் உடல் மன நிலைக்காகவும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், டுவென்டி டுவென்டி போட்டிகளில் ஓய்வுபெற்ற கெவின் பீற்றசன் தான் மீண்டும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்ற வேண்டுமாயின் இங்கிலாந்தின் போட்டி அட்டவணைகளில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

தற்போது இங்கிலாந்து- அவுஸ்திரேலிய அணிகளுக் கிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டி இடம்பெற்று வரும் நிலையில் தனது மனைவி, தாய், தந்தை, மாமி, சகோத ரர்கள், உற்ற நண்பர்கள் ஆகியோர் இந்தத் தொடரில் நீ விளையாடியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் என எண்ணவில் லையா? எனக் கேட்பதாகத் தெரிவித்த கெவின் பீற்றசன் அவர்களுக்குத் தான் இல்லை என்றே பதிலளித்ததாகத் தெரிவித்தார். தான் அவற்றைத் தவறவிடுவதாக எண்ணவில்லை எனத் தெரிவித்தார்.

தனக்குச் சில வேளைகளில் தேவைப்பட்டது ஓர் தற்காலிக ஓய்வாகக் கூட இருக்கலாம் எனத் தெரிவித்த கெவின் பீற்றசன் அதைப் பற்றி யாரும் அறிய முடியாது எனத் தெரிவித்தார். கடந்த 7 ஆண்டுகளில் தான் ஏராளமான போட்டிகளில் பங்கு பற்றியுள்ளதாக அவர் தெரிவித்தார். தனது ஓய்வினை அவர் மீளப் பரிசீலனை செய்வாரா எனக் கேட்கப்பட்டமைக்கு அவ்வாறு நடக்காது என எப்போதும் சொல்லவில்லை எனத் தெரிவித்த அவர் எனினும் அவ்வாறு நடப்பதற்கு இங்கிலாந்தின் போட்டி அட்டவணைகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுவதாகத் தெரிவித்தார்.

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி



இலங்கை அரச சேவை விளையாட்டுச் சங்கம் வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைய முதன்முறையாக வடமாகாண அரச சேவை மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் 5 ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மைதானத்தில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர தலைமையில் அரச திணைக்களங்களுக்கிடையில் வவுனியா அரச சேவை விளையாட்டுச்சங்கத்தினால் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி , முல்லைத்தீவு , மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற இருக்கின்ற அரச திணைக்கள அணிகள் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஊடாக கிரிக்கெட் போட்டி, செயலாளர் மாவட்ட செயலகம், வவுனியா என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு கிரிக்கெட் போட்டி செயலாளரால் கோரப்பட்டுள்ளது.




# கூடைப்பந்தாட்டப் போட்டி
# மெதடிஸ்த பெண்கள் சம்பியன்



இலங்கை மக்கள் வங்கியின் ஆதரவுடன் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் 14 வயதுப் பிரிவினருக்காக நடத்திய கூடைப் பந்தாட்ட இறுதிப் போட்டியில் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் பொன்னாலை வரதராஜ பெருமாள் வித்தியாலயமும் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பொன்னாலை வரதாஜ பெருமாள் வித்தியாலயமும் வடமராட்சி மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் மோதிக் கொண்டன. முதல் பாதி ஆட்டத்தில் 7:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை முன்னிலையில் இருந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா 5 புள்ளிகளைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. ஆட்ட நிறைவில் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 12:6 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. இரு அணிகளும் தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் விளையாட தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# உதைபந்தாட்டப் போட்டி

உரும்பிராய் சென் மைக்கல் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ள உதைபந்தாட்டப் போட்டி இன்று புதன்கிழமை பி.ப. 4.45 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.


யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கத்துவ கழகங்களுக்கான போட்டியில் அடுத்த சுற்றுக்கு தெரிவு செய்வதற்கு இப்போட்டி நடைபெறவுள்ளது.



DSI நிறுவனத்தின் அனுசரணையில் இலங்கைப் பாடசாலைகள் கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட அகில இலங்கை ரீதியான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மாகாண மட்டத்தில் சம்பியன்களான யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் 16 வயதுப் பிரிவு ஆண்கள் அணியினரையும் 14 வயதுப் பிரிவு பெண்கள் அணியினரையும் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்ட 16 வயதுப் பிரிவு பெண்கள் அணியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடியாக விளையாடி இலங்கை முன்னிலை



இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையில் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகின்றது.

தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி 209 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றதுடன், 2-வது போட்டி சமனிலையானது.

இந் நிலையில் 3-வது டெஸ்ட் போட்டி கடந்த 8 ஆம் திகதி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி தமது முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் சார்பில் அசாத் சபீக் அதிகபட்சமாக 75 ஓட்டங்களையும், அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பெரேரா 4 விக்கெட்டுக்களையும், ஹேரத் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி அன்றைய முதல் நாள் ஆட்டநேர முடிபில் 3 முக்கிய விக்கெட்டுக்களை இழந்து 44 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது.

நேற்று முன்தினம் 2-வது நாள் ஆட்டம் மழையினால் ஒரு பந்துகூட வீசப்படாத நிலையில் கைவிடப்பட்டது.

இந்நிலையில் நேற்றைய 3-வது நாள் ஆட்டத்தை தொடர்ந்த இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 337 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் தரங்க பரணவிதான, திலான் சமரவீர, திஸார பெரேரா ஆகியோர் முறையே 75, 73, 75 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் யுனைட் கான் 70 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், சஜீட் அஜ்மல் 66 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 111 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற நிலையில் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி நேற்றைய 3-ம் நாள் ஆட்ட நேர முடிபில் 1 விக்கெட்டினை இழந்து 27 ஓட்டங்களை எடுத்துள்ளது.

களத்தில் மொஹமட் ஹபீஸ் 8 ஓட்டங்களுடனும், அசார் அலி 6 ஓட்டங்களுடனும் உள்ளனர். வீழ்த்தப்பட்ட விக்கெட்டினை குலசேகர கைப்பற்றினார்.

போட்டி நிறைவடைய இரு நாட்கள் எஞ்சியிருக்கும் நிலையில் சீரற்ற காலநிலை போட்டிக்கு இடையூறை ஏற்படுத்தாமல் இருந்தால் நிச்சயம் இந்த போட்டி ஒரு முடிவைத்தரும்.

## உலக டென்னிஸ் தரவரிசை: பெடரர், அஸரென்கா முதலிடம்


உல டென்னிஸ் வீரர்-வீராங்கனைகளின் தர வரிசைப்பட்டியலை சர்வதேச டென்னிஸ் சங்கம் வெளியிட்டுள்ளது.

இதன்படி விம்பிள்டன் பட்டத்தை 7-வது முறையாக வென்ற ரோஜர் பெடரர் 3-வது இடத்தில் இருந்து முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இதேபோல் பெண்கள் ஒற்றையர் தர வரிசையில் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அஸரென்கா 2-வது இடத்தில் இருந்து முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.



விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் கலப்பு இரட்டையர் பைனலில் பயஸ், வெஸ்னினா ஜோடி, அமெரிக்காவின் மைக் பிரையன், லிசா ரேமண்ட் ஜோடியிடம் தோல்வியடைந்தது. இரண்டாவது இடத்திற்கான கோப்பையுடன் பயஸ்(வலது), வெஸ்னினா.



லண்டனில் டென்னிஸ் சங்கம் சார்பில் நடந்த விருந்தில் வெற்றிக்கோப்பையுடன் பங்கேற்ற விம்பிள்டன் சாம்பியனான சுவிட்சர்லாந்தின் பெடரர்(இடது), அமெரிக்கவின் செரினா.

# வெளிநாடு செல்ல முற்பட்ட 600 பேரைக் காணவில்லை

தென்னிந்திய மற்றும் இலங்கையில் இருந்து கடல் மார்க்கமாக வெளிநாடுகளுக்கு செல்ல முற்பட்ட 600க்கும் அதிகமானவர்கள் காணாமல் போயிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழ அகதிகள் புனர்வாழ்வு மையத்தின் தலைவரும், மறைந்த தலைவர் தந்தை செல்வாவின் மகனுமான எஸ்.சி.சந்திரஹாசன் இதனைத் தெரிவித்துள்ளார்.

த ஏசியன் ஏஜ் இணைத்தளம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. இந்திய மத்திய அரசாங்கமும், தமிழக அரசாங்கமும் தென்னிந்தியாவில் உள்ள அகதிகளுக்கு முழுமையான சேவையை வழங்கி வருகின்றன.

எனினும், முகாம்களில் உள்ள அதிகாரிகளே அகதிகளுக்கு பாரிய நெருக்கடிகளை கொடுப்பவர்களாக உள்ளனர். இதன் காரணமாகவே அதிக அளவிலான அகதிகள் அங்கிருந்து அவுஸ்திரேலியா, கனடா, பிரித்தானியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு தப்பிச் செல்ல முயற்சிக்கின்றனர்.

பெரும்பாலனவர்கள் இடையிலேயே கைது செய்யப்பட்டு விடுகின்றனர். எனினும் 600க்கும் அதிகமானவர்கள் இதுவரையில் காணாமல்போய் இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (எ-11)


**யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்**

**நன்றி கூறுகின்றோம்.**

கடந்த 07.07.2012ம் திகதி இடம்பெற்ற எமது நிறுவனத்தின் வெள்ளிவிழா திருப்திகரமாக நிறைவேறுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய சகலருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

குறிப்பாக கடந்த 11.06.2012ம் திகதி முதல் 18.06.2012ம் திகதி வரையிலான காலத்தில் இடம்பெற்ற கொடி வாரம் சிறப்பான முறையில் நடந்தேறுவதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கிய கௌரவ வட மாகாண ஆளுநர், மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோருக்கும் விசேடமாக எமது ரிக்கெற்றுக்களைப் பெற்று நிதியுதவி வழங்கிய தாராள சிந்தையுள்ளவர்களுக்கும் ரிக்கெற்றுக்களை விற்பனை செய்துதவிய எமது அபிமானிகளுக்கும் ஆர்வலர்களுக்கும் சிரமம் பாராது வெள்ளி விழா தினத்தன்று எம்மால் ஏற்பாடு செய்யப்பட்ட சகல விளையாட்டுப் போட்டிகளிலும் ஆர்வமுடன் பங்குபற்றிய எமது நிறுவனப் பயனாளிகளுக்கும் வெள்ளி விழா தொடர்பான சகல செய்திகளுக்கும் விளம்பரங்களுக்கும் முன்னுரிமை வழங்கி அவற்றை இலவசமாக பிரசுரித்துதவிய பத்திரிகை நிறுவனங்களுக்கும் அதற்கு அனுசரணையாக செயற்பட்ட பிரதம ஆசிரியர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

முகாமைத்துவக் குழு
யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம்

(C-507)



**UNIVERSITY OF JAFFNA**
**BID NOTICE**

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed bids from the qualified contractors for the following works.

| Work / Service Details | Security deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Minimum Grade |
|---|---|---|---|
| Repairs, Improvements and Painting at Student Centre, University of Jaffna | 243,000.00 | 750.00 | Minimum ICTAD Grade C6 (Civil) |
| Renovation of Animal House at Department of Zoology, University of Jaffna. | 97,000.00 | 750.00 | Minimum ICTAD Grade C8 (Civil) |
| Construction of Wash Room at Faculty of Medicine, University of Jaffna. | 10,300.00 | 750.00 | Minimum ICTAD Grade C10 (Civil) |

Bid forms may be obtained from the ***Deputy Registrar / Capital Works & Planning Unit University of Jaffna*** upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Counter, University of Jaffna till ***20.07.2012.***

Perfected bid should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna, P.Box 57, Thirunelvely, Jaffna or could be deposited in the bid box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till ***2.30 p.m on 31.07.2012*** and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

P.O.Box 57,
Thirunelvely,
Jaffna.
10.07.2012

Registrar
University of Jaffna.

(C-506)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரிகளின் உத்தரவு...

படைவீரர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் இராணுவச் சட்டங்களுக்கு அமைய கடுமையான தண்டனை விதிக்கப்படும். கடந்த காலங்களைப் போன்றே எதிர்காலத்திலும் குற்றச் செயல்களில் ஈடுபடும் படைவீரர்களுக்கு தப்பிக்க வாய்ப்பில்லை .

குற்றச் செயல்களில் ஈடுபடும் படைவீரர்களுக்கு தண்டனை விதிப்பது தொடர்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விசேட பொறிமுறைமையொன்று காணப்படுகின்றது. அந்தப் பொறிமுறைமையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு இறுதி அறிக்கை வெளியிடப்பட்ட தனைத் தொடர்ந்து படையினர் குற்றச் செயல்களில் ஈடுபட்டார்களா என்பது பற்றி விசாரணை செய்ய இராணுவ நீதிமன்றங்கள் அமைக் கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட நபர்கள் அல்லது குழு தொடர்பில் உரிய ஆதாரங்கள் இருந்தால் அது தொடர்பான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியும். இறுதிக் கட்ட யுத்தத்தின் போது உயிரிழந்தவர்கள் பற்றிய புள்ளி விபரங்கள் திரிபுபடுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இராணுவமும், அரசாங்கமும் பொதுமக்களைப் பாதுகாப்பதில் கூடுதல் சிரத்தை காட்டிய போதிலும், யுத்தத்தின் போது ஓரளவு பொது மக்கள் இழப்புக்களைத் தவிர்க்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பலவந்தமான முறையில் படையில் இணைத்துக் கொண்டதுடன் பொதுமக்களை மனித கேடயமாக பயன்படுத்திக் கொண்டதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (எ-11)

# 2 கிலோ கஞ்சா...

யில் கட்டிட வேலைகளுக்கான உபகரணங்கள் அடங்கிய பையொன்றில் இரண்டு கிலோ நிறையுடைய இக் கஞ்சா செடிகளைவைத்திருந்தார் என பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

# சென்னை...

பலர் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், மன்னார் கத்தோலிக்க ஆயருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் சென்னையில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கூறுகிறார்கள்.

அப்படியான ஒரு போக்கு நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே அனைத்து மத தமிழ் மக்கள் மன்றம் எனும் அமைப்பு நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

தமிழக ஆயர் பேரவைத் தலைவர் பேராயர் ஏ.எம்.சின்னப்பா இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தலைமையேற்றிருந்தார். (எ-11)

# யாழ். காணிகள் எது...

வந்துள்ளார். உள்நோக்கங்களைக் கொண்ட சில ஊடகங்கள் இராணுவம் காணிகளை சுவீகரிப்பதாக குற்றம் சுமத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்ததனைத் தொடர்ந்து கிரமமான முறையில் யாழ்ப்பாணத்தில் படையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பிற்கு படையினரின் பிரசன்னம் அவசியமானது. தேவையான அளவு படையினரே யாழ்ப்பாணத்தில் நிலை நிறுத் தப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு நிலைவரத்தின் அடிப்படையில் படையினரின் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

1980 களில் இடம்பெற்றதனை போன்று மீண்டும் சம்பவங்கள் நடைபெறுவதனை இராணுவம் விரும்பவில்லை எனக் கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குதல் மற்றும் முன்னாள் போராளிகளுக்கு உதவிகளை வழங்குதல் ஆகியவற்றில் படையினர் காட்டிவரும் சிரத்தை பாராட்டுக்குரியது என பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கீன் தெரிவித்துள்ளார். (எ-11)

# அதிகாரம் இல்லாத...

இருவரும் கலந்துரையாடிய போதே ஜெகத் ஜெயசூரிய இவ்வாறு கூறியுள்ளார்.

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்தபோது இராணுவத்துக்கு மட்டுமன்றி, இலங்கையின் ஏனைய ஆயுதப்படைகளுக்கும், பொலிஸாருக்கும் கூட உத்தர விடும் அதிகாரத்தைக் கொண்டிருந்தார். ஆனால் இராணுவத்தின் ஒரு அலகிற்கு தளபதியை நியமிக்கும் அதிகாரம் கூட என்னிடம் இல்லை.

மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க, மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, மேஜர் ஜெனரல் அருண ஜெயதிலக, மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுரு, மேஜர் ஜெனரல் சவீந்திரசில்வா, மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண, மேஜர் ஜெனரல் சுமதே பேரேரா, மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா, மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே, மேஜர் ஜெனரல் லலித தவுலகல ஆகியோர் பாதுகாப்புச் செயலாளருடன் நேரடியான தொடர்புகளை வைத்துள்ளனர்.

நான் எதைப் பற்றி அவர்களிடம் விசாரித்தாலும் பாதுகாப்புச் செயலாளரின் அனுமதியுடனேயே, அதைச் செய்ததாக சொல்கிறார்கள். இப்போது நான் எதைப் பற்றியும் அவர்களிடம் கேள்வி கேட்பதில்லை, என்ன நடக்கிறது என்று சும்மா பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று இராணுவத்தளபதி ஜெகத் ஜெயசூரிய புலம்பியுள்ளார்.

இலங்கை இராணுவ சேவா வனிதா பிரிவு என்பது இராணுவத் தளபதியின் மனைவின் கீழ் உள்ள ஒரு நலன்காக்கும் பிரிவாகும். இதில் சாதாரண தொழிலாளர்களே பணியாற்றுகின்றனர். (எ-11)

# அரசியல் கைதிகளின்...

மனித உரிமை அமைப்புகளினதும் தலையீடு இன்றியமையாத தேவைஎனவும் கடிதத்தினூடாக வேண்டு கோள் விடுக்கவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

அண்மையில் வவுனியா சிறைச்சாலையில் சிறைச்சாலை அதிகாரிகள் மூவரைத் தமிழ்க் கைதிகள் சிறைப்பிடித்ததையடுத்து அங்கு பெரும் கலவரம் ஏற்பட்டது. அதிகாரிகளை மீட்டெடுப்பதற்கு சிறைச்சாலைக்குள் புகுந்தவிசேட அதிரடிப்படையினர்பொலிஸாருடன் இணைந்து கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியதுடன் தமிழ்க் கைதிகளுக்கு எதிராக மிலேச்சத்தனமான தாக்குதல்களையும் கட்ட விழ்த்துவிட்டனர். இதனால் பலர் காய மடைந்தனர்.

இதனையடுத்து அங்கிருந்த கைதிகள் இரவோடிரவாக அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர். அங்கு வைத்தும் தமிழ்க் கைதிகளைச் சிறைச்சாலை அதிகாரிகள் மிகவும் கொடூரமான முறையில் தாக்கி அவர்களின் கை கால்களை முறிந்துள்ளனர். இதனால் கைதிகளின் நிலைமை கவலைக்கிடமானது.

இந்நிலையல் அநுராதபுரத்திலிருந்து தமிழ் கைதிகளை சிறைச்சாலை அதிகாரிகள் கண்டி போகம்பரை மற்றும் மஹர ஆகிய சிறைச்சாலைகளுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இவ்வாறு கொண்டுசெல்லப்பட்ட கைதிகளுள் பலர் குறித்த பிரதேசங்களை அண்மித்துள்ள வைத்தியசாலைகளில் அவசர சத்திரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர். மஹல சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட கைதிகள் ராகம வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டனர்.

ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அவசர சத்திரசிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த கணேசன் நிமலரூபன் என்ற தமிழ் அரசியல் கைதி கடந்த புதன்கிழமை உயிரிழந்தார். சிறைச்சாலை அதிகாரிகளின் மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் மரணமானார். இருப்பினும் அவர் மாரடைப்பாலேயே உயிரிழந்துள்ளார் என இலங்கை அரசு கூறிவருகின்றது. அதிகாரிகளின் தாக்குதலுக்கு இலக்கான மற்றுமொரு கைதி கோமா நிலையில் உள்ளார்.

நிமலரூபனுக்கு நேர்ந்த கதி தங்களது உறவுகளுக்கு நேர்ந்துவிடுமோ என்ற அச்ச நிலைமை உருவாகியுள்ளதையடுத்தே தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப் படுத்துமாறு கோரியும், விடுதலையைவலியுறுத்துமாறு குறிப்பிட்டும் தமிழ் கைதிகளின் உறவுகள் ஐ.நா. மனித உரிமைகள் சபையின்மனித உரிமைகள்பேரவைக்குக்கடிதம் ஒன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக நம்பப்படுகிறது. (எ-11)

★ DS Max Marketing International Company க்கு
★ பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.
1. Distributor 2. Supervisor 3. ASS.Manager
★ தகைமை :-க.பொ.த. சாதாரண தரம் O/L
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் வயது எல்லை 18 - 40 வரை
★ 6 மாத கால பயிற்சி. பயிற்சியின் போது 8,000 - 12,000வரை பெறலாம். பயிற்சி நிறைவடையும் போது 35,000 - 45,000 வரை பெற முடியும்.
குறிப்பு:- தங்குமிட வசதி இலவசம். புனர்வாழ்வு முகாம்களில் இருந்து வந்தோருக்கு முன்னுரிமை.
தொடர்புக்கு :- 077 6057421, 077-5574795
(8794)

# கோமா நிலையிலுள்ள...

ஜோசப், மன்னார் மாவட்ட எம்.பி.வினோ நோகராதலிங்கம் ஆகியோரைச் சந்தித்து தமதுமகனைப் பாதுகாப்பதற்கு உதவுமாறு உருக்கமாகக் கோரியுள்ளார்.

முத்துராஜா டில்ரூக்ஷன் 2006ஆம் ஆண்டு தொழில்வாய்ப்புப் பெற்று கட்டார் சென்றுள்ளார். அங்கிருந்து அவர் தமது குடும்பத்துடன் அடிக்கடி தொடர்புகொண்டுள்ளார்.

இந்த நிலையில் 2007ஆம் ஆண்டு நவம்பரில் நாடு திரும்பிய பின்னர் இவர் மன்னார் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.


அப்போது குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டிருந்த அவர் மன்னார் பகுதியில் போர் இடம்பெற்று அவரது குடும்பத்தினர் அங்கிருந்து இடம்பெயர்ந்த பின்னர் தொடர்பற்றிருந்துள்ளார்.

இந்நிலையில் கடந்தவாரம் இவர் ராகம வைத்தியசாலையில் கோமா நிலையில் இருப்பதை அறிந்த பெற்றோர் அங்கு சென்று அவரைப் பார்த்துள்ளனர்.

தமது மகன் இரு கால்களும் சங்கிலியால் கட்டப்பட்ட நிலையில் கோமா நிலையில் உயிருக்குப் போராடிக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்த தாயார் தமது மகனைக் காப்பாற்றஉதவுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-11)

A/L மாணவர்களுக்கான
இந்து நாகரிகம்
பரீட்சை சார்ந்த பாடநூல்
வெளிவந்துள்ளது. பிரபல புத்தக நிலையங்களில் பெறலாம்.
ஆசிரியர்: V. யுகசீலன்.
(8795)

உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலும் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.
விசேட சலுகைகள்!
மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள், மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.
DHL WORLDWIDE EXPRESS
கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள்,CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட
DHL WORLDWIDE EXPRESS
திருமுருகன் கொம் நெற்
இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி. T.P : 021 222 7835



சரவணா ரெக்ஸ்
பிரமாண்டமான ஆடித்தள்ளுபடி
இடம் :- சரவணா ரெக்ஸ் (களஞ்சியசாலை)
சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(கெங்காதரன் மருத்துவமனைக்கு அருகாமை)
காலம் :- 07.07.2012 இன்று முதல்
நேரம் :- காலை 9.00 மணிமுதல் இரவு 7மணிவரை
(விடுமுறை நாட்களிலும் மலிவு விற்பனை நடைபெறும்)
(சி-434)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org